மலர்-2 இதழ்-44 ஜூன் 16-30 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

e- magazine



e- magazine

# சிவ வழிபாட்டு முறை

# சூட்சும ரகசியங்கள்

- மனம் எங்கு உள்ளது என்று தெரியுமா? நாம் எதை நினைக்கிறோமோ அங்கு செல்கிறது; அதற்கு தூரம் தடை இல்லை.
- நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும், சுய உணர்வு உள்ளது.
- நிலப்பிராண சக்தி உடலுக்கு உறுதியை தருகிறது.
- ஒவ்வொரு மனிதனுக்கும் சூட்சும சரீரம் உண்டு. இதுவே ஒளி உடல் எனப்படும்.
- சுகமும் நோயும் வலியும் உணர்வும் நமது பிராண உடலால் உணரப்படுகிறது.
- மகான்கள், சித்தர்களைச் சுற்றி ஒளி உடல் பல நூறு அடிகளுக்கு பரவி இருக்கும்.
- பல்வேறு நோய்களின் பதிவுகள் மனோ சரீரத்தில் பதிவாகி உள்ளது.
- சிலர் கைகளில் உள்ள பிராணசக்தி, அவர்கள் சமையல் செய்வது மூலமாக ருசியாக வெளிப்படுகிறது.
- மருந்தின்றி மாத்திரையின்றி உடல் நோய்களை பிராணசரீரம் குணப்படுத்துகிறது.
- மனிதனின் உள்ளுணர்வு மிகப்பெரிய வழிகாட்டி.
- மனிதன் என்பது, அவன் உடல் மட்டுமல்ல.
- கோவில்களில், சித்தர் சமாதிகளில் மனித ஜிவனுக்கு ஜீவ சக்தி கிடைக்கிறது.
- மயக்கம் என்பது பௌதீக உடலுக்கும் சூட்சும உடலுக்கும் உள்ள, தொடர்பு பாதிப்பே ஆகும்.
- சிறுவர் சிறுமியர்களின் அருகில் இருப்பது, பெரியவர்களின் உடலில் இளமை சக்தி ஒட்டம் பெறுகும்.
- மனதாலும் உடலாலும், இயற்கையை விட்டு விலகும் போது, தீராத களைப்பு ஏற்படும்.
- மனிதன் தலைகீழாக வளரும் மரம். மூளை என்ற வேர் அனைத்தும் தலையில் தான் உள்ளது.
- நமது உடலின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒருவித மொழியில் நம்முடன் பேசுகிறது.
- ஒரு மனிதனினை புண்பட செய்வது நூதனமான கொலைக்கு சமம்.
- மனிதனை தவிர மற்ற இனங்கள் சூட்சும உணர்வு மூலமே எதையும் அணுகுகிறது.
- நாம் விஞ்ஞான அறிவையே பயன்படுத்தினால், மெய்ஞான அறிவை இழந்து விடுவோம்.
- நமது வீட்டில் பஞ்ச பூத பிராணசக்தி அனைத்து அறைகளிலும் ஒடிக்கொண்டிருக்கவேண்டும்.
- வலி என்பது உடலின் மொழி. அதை ஒரு போதும் மாத்திரையால் அமுக்க கூடாது.
- நிகழ்கால உணர்வுடன் இருக்க பழகுங்கள்.
- வலியை ஏற்று கொண்டு அதன் மூலத்தை ஆராய்ச்சி செய்யுங்கள்.
- உடலின் உறுப்புக்கள் மனதுடன் ஒத்த இயக்கமே ஆரோக்கியம்.
- விவசாய நிலத்தில் தாயின் கருவரையில் உள்ளதை போன்ற பிராணசக்தி உள்ளது.
- நிற்கும் தண்ணீரில் பிராணசக்தி குறைவாகவும், அசையும் தண்ணீரில் அதிகமாகவும் உள்ளது.
- நம் உடலில் எங்கெல்லாம் புதிய தண்ணீர் நுழைகிறதோ அங்கெல்லாம் காற்று பிராண சக்தி நுழைகிறது.
- தென்றல் காற்றில் அதிக பிராணசக்தி உள்ளது.
- அருவி நீரில் அதிக பிராணசக்தி உள்ளது.
- கடல்நீர் நம்முடைய பாவ தீய கர்ம வினைகளை உள்வாங்க கூடிய ஆற்றல் உள்ளது.
- உப்பு நீர் தெளித்து கழுவினால், சூட்சும தீய பதிவுகள் நீங்கும்.
- கர்ப்பம் கொண்ட பெண் தீய எண்ணம் கொண்டவர்கள் பார்வையின் முன்னே செல்ல, பேச, தொடவோ கூடாது.
- மலர்ந்த முகத்துடன் மற்றவர்களை அணுகும் போது நமது சூட்சும சரிரத்தின் கவசம் பெறுகிறது.
- செயல்குறைந்த உடல் உறுப்பை, அன்புடன் உணர்ந்தால் சக்தி பெற துவங்குகிறது.
- ஒரு நாளில் சில நிமிடங்களாவது, வெட்ட வெளியில் செருப்பின்றி நடங்கள்.
- பிறந்த குழந்தையும், நீடித்த நோயாளியும் ஒரே அறையில் தூங்குவது நல்லதல்ல.
- சூரிய ஒளியில் காயவைத்த துணி, பிராண உடலில் உள்ள பிராண ஒட்டுண்ணிகளை அழிக்கிறது.
- மனது மாயையில் விழுகிறது. சூட்சும சரிரமோ எப்போதும் விழிப்புணர்வோடு உள்ளது.
- மனித உடல் இறப்பதற்கு முன், அவனது பிராண சரீரம் இறக்க துவங்குகிறது.
- தீட்சண்யமான தீய பார்வை கர்ப்ப சிதைவை ஏற்படுத்தும்.
- நாம் பயன்படுத்தும் பொருள்களில், நமது எண்ண பதிவு ஏற்படுகிறது.
- நாம் தும்மும் போது, அதன் அதிர்வு, தாயின் நாபிச்சக்கரத்தை சென்று தாக்குகிறது.
- தொடர்ந்த ஒரே எண்ணம், செயல் வடிவம் பெறும்.
- தீய எண்ணங்கள் தீய நீரை உடலில் சுரக்க செய்கிறது.
- பிராண சக்தி இல்லா உணவு, உடலுக்கு சுமையே.
- போதை பொருள், நரம்பு மண்டலத்தை அழிக்கும்.
- தீயவர்களை சூழ்ந்து தீய எண்ணமும், நல்லவர்களை சூழ்ந்து நல்ல எண்ணமும் இருக்கும்.
- தூக்கம் என்பது, விழிப்புணர்வு அற்ற தியானம். தியானம் என்பது, விழிப்பணர்வுடன் கூடிய தூக்கம்.

# பசுவிற்கு அகத்திக்கீரை கொடுத்து வழிபடுவது ஏன்?

பசுவிற்கு அகத்திக்கீரை, பழம் கொடுத்து வழிபட்டால் நம் பாவம் தீரும் என்பது ஐதீகம். இதற்குரிய மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தால் இன்னும் சிறப்பு.

ஸர்வ காம துகே தேவி ஸர்வ
தீர்த்தாபிசோசினிபாவனே ஸுரபி
ஸ்ரேஷ்டேதேவி துப்யம்
நமோஸ்துதே!

எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்பவளே! எல்லா தீர்த்தங்களாலும் அபிஷேகம் செய்யப் படுபவளே! மங்கல வடிவானவளே! பெருமைக்குரிய காமதேனுவே! உன்னை வணங்குகிறேன் என்பது இதன் பொருள்.



இதைச் சொல்லி பசுவை வழி பட்டால், முன்னோர் சாபம், குடும்ப சாபம் தீரும். பிதுர் ஆசி பூரணமாக கிடைக்கும். குடும்பத்தில் தடைபட்ட சுபவிஷயங்கள் விரை வில் நடந்தேறும்.

# நோய்நொடி இன்றி சுகமான மரணம் கிடைக்க உதவும் வழிபாடு



இன்று பெருகி வரும் வாகன விபத்துக்கள். அதில் உயிர் நஷ்டமும்,, அங்கஹீனம் ஏற்படுதலும் அதிகம். மது போதையிலும், ஆணவ ட்ரைவிங் காலும், விபத்தில் சிக்குபவர்களைப் பற்றி நமக்கு தேவையில்லை.

ஆனால் துரதிர்ஷ்டமாக, விபத்தில் நல்ல ஒட்டுனர்கள் யாரும் சிக்கக் கூடாது என்பதற்காகவே இந்த தாந்த்ரீக பூஜா பற்றிய குறிப்பு...

வாகன ஓட்டுபவர்கள் [Driver] வணங்க வேண்டிய தெய்வம் எமதர்ம ராஜாவாகிய ஸ்ரீ காலமஹாப்ரபு. இவருடயை வாகனமாகிய எருமை காளை (எருது) அதி அற்புத தபோபலங்களை உடையது.

எருமை மாட்டிற்க்கு மக நட்சத்திரத்தில் அகத்தி கீரை அளித்து வந்தால், நோய் நொடி இல்லாத சுகமான மரணம் கிட்டும்.

எம பயம் இல்லாது, மரண தேவதையை எதிர் நோக்கலாம்.

அந்த எம பயம் நீங்க மாரடைப்பு, வாகன விபத்து, தற்க்கொலை, போன்று துர் மரணங்கள் ஏற்படாமல், எந்தவித சிரமமின்றி சிரித்த முகத்துடன் தெய்வச் சிந்தனையுடன் நல் மரணம் வேண்டுபவர்கள் மக நட்சத்திரத்தில் எருமை வழிபாடு செய்தால் மேற்கண்ட விதத்தில் துர் மரணம் நிகழாது.





# இராவணன் எழுதிய நூல்கள்

இமாலயத்தையே அசைத்த மாபெரும் வீரனும், சாம கானம் பாடி சிவனை மகிழ்வித்தவனுமான சிறந்த சிவ பக்தன் இராவணன்.

“இராவணன் மேலது நீறு
எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு
பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு
தத்துவம் ஆவது நீறு
அராவணங்கும் திருமேனி
ஆலவாயான் திருநீறே”

திருநீற்றுப் பதிகத்தில் இராவணனை சேர்த்து திருநீற்றின் பெருமையை பாடியுள்ளார் திருஞானசம்பந்தர்.

இலங்கையை தன் பராக்ரமத்தொடு நல்லாட்சி புரிந்து ஆண்ட அரசன், புராணங்களில் கொடிய அரக்கனாக சொல்லப்பட்ட தமிழன்.

இசை, இலக்கியம், மருத்துவம் மற்றும் சிறந்த அறிவியல் ஞானமும் கொண்டவன் என்பதற்கு ஒரு உதாரணம் புஷ்பக விமானம். மருத்துவத்திலும் சிறந்தவன் என்பதற்கு இராவணன் எழுதிய இந்த நூல்களே சாட்சி...

1. உடற்கூறு நூல்
2. மலை வாகடம்
3. மாதர் மருத்துவம்
4. இராவணன் 12000
5. நாடி, எண்வகை பரிசோதனை நூல்
6. இராவணன் வைத்திய சிந்தாமணி
7. இராவணன் மருந்துகள் 12000
8. இராவணன் நோய் நிதானம் 72 000
9. இராவணன் கியாழங்க 7000
10. இராவணன் வாலை வாகடம் 40000
11. இராவணன் வர்ம ஆதி நூல்
12. வர்ம திறவுகோல் நூல்கள்
13. யாழ்பாணம் மூலிகை அகராதி
14. யாழ்பாணன் பொது அகராதி
15. பெரிய மாட்டு வாகடம்
16. நச்சு மருத்துவம்
17. அகால மரண நூல்
18. உடல் தொழில் நூல்
19. தத்துவ விளக்க நூல்
20. இராவணன் பொது மருத்துவம்
21. இராவணன் சுகாதார மருத்துவம்
22. இராவணன் திராவக தீநீர் நூல் அர்க்க பிரகாசம்
23. இராவணன் அறுவை மருத்துவம் 6000
24. இராவணன் பொருட்பண்பு நூல்
25. பாண்ட புதையல் முறைகள் 600
26. இராவணன் வில்லை வாகடம்
27. இராவணன் மெழுகு வாகடம்



# மனிதர்களும் பக்தியும்

திருமாலும், லட்சுமியும் ஆதிசேஷனின் மீது அமர்ந்து சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந் தனர். கலியுகத்தில் மனிதன் எப்படியிருப்பான் என்பது பற்றிய பேச்சு அது. திடீரென திருமால் எழுந்தார்.

கருடன் கணப்பொழுதில் அவர் முன் வந்து நின்று, “சுவாமி ஏறுங்கள்'' என்றான். அவர் எங்கு போகிறார் எனத்தெரியாவிட்டாலும், தன் மேல் அவர் ஏறியதும், அதுபற்றிய விபரம் கேட்டு, அங்கே வேகமாகப் போய் நிற்பது கருடனின் வழக்கம்.

பெருமாளும் கருடன் மேல் ஏறி, “அதோ! வண்ணத்துணிகள் காய வைக்கப்பட்டுள்ள அந்த ஆற்றங்கரைக்குப் போ,'' என்றார்.

கருடன் அதை நோக்கிப் பறக்கவும், “வேண்டாம்... வைகுண்டத்துக்கே திரும்பி விடு,'' என்றார்.

கருடனும் வைகுண்டத்தில் அவரை இறக்கி விட்டார்.

அவரைப் பார்த்த லட்சுமி, “சுவாமி! பேச்சைக் கூட பாதியில் விட்டு விட்டு, என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் அவசரமாகக் கிளம் பினீர்கள்! இப்போது, திரும்பி விட்டீர் களே!'' என்றாள்.

திருமால் சிரித்தபடியே, “லட்சுமி! ஒரு இளைஞன் என் திருநாமத்தை உச்சரித்தபடியே ஆற்றங்கரையோரமாக நடந்து சென்றான். கவனக்குறைவாக, வழியில் சலவைத் தொழி லாளி ஒருவன் காயப்போடப் பட்டிருந்த ஒரு சேலையை மிதித்து விட்டான். அதைப் பார்த்த தொழிலாளி ஆத்திரத்தில் அவனை விரட்டினான். நான் அவனைக் காப்பாற்ற புறப்பட்டேன். ஓடிய இளைஞன், என் திருநாமம் சொல்வதை விட்டு விட்டு வழியில் கிடந்த கல்லை எடுத்து, சலவைத்தொழிலாளி மீது எறிவதற்கு ஓங்கினான். ‘ஆகா! இனி என் உதவி அவனுக்கு தேவையில்லை' என திரும்பி விட்டேன்,'' என்றார்.

எந்த நிலையிலும் இறைசிந்தனையுடன் இருப்பவனை இறைவன் நிச்சயம் அரவணைத்து காப்பார்.







# ஆறிலும் சாவு நூறிலும் சாவு

''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இதற்கு, சாவு ஆறிலும் வரும், நூறிலும் வரும் என்றே நாம் எல்லோரும் பொருள் கொள்கிறோம். வாழ்க்கை நிலையற்றது என்பதைத் தான் இப்படிச் சொன்னார்கள் என்று நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்றாலும், அதன் உண்மையான பொருள் இதுவல்ல.

குருசேத்திர போரில், போருக்கு முன்னதாக தனது மூத்த பிள்ளை கர்ணன் என்பதை அறிந்த குந்திதேவி, அவனிடம் சென்று, பாண்டவர் ஐவருடன் சேர்ந்து கவுரவர்களை எதிர்த்து போரிட அழைக்கிறாள். அப்போது கர்ணன் கூறுகிறான்:

''தாயே! நான் பாண்டவர் ஐவருடன் சேர்ந்து ஆறாவது ஆளாகப் போரிட்டாலும் சரி, கவுரவர்கள் நூறு பேருடன் சேர்ந்து நூறாவது ஆளாக போரிட்டாலும் சரி, இறப்பது உறுதி என்பது எனக்குத் தெரியும். ஆகவே, ஆறிலும் சாவு அல்லது நூறிலும் சாவு. எப்படி செத்தால் என்ன ? செஞ்சோற்றுக் கடன் கழிக்க என்னை வளர்த்து ஆளாக்கிய துரியோதனனிடமே இருந்து உயிரை விடுகிறேன்'' என்கிறான் .

இங்கே கர்ணன் கூறியதுதான், மேற்படி ''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'' என்ற பழமொழிக்கு உண்மையான பொருள்.



# வறுமையில் தவித்த விவசாயி... செழிப்படைய வைத்த குலதெய்வம்... விளக்கமளித்த பெரியவா...

மஹா பெரியவர் ஊர் ஊராகச்சென்று சாதுர் மாஸ்ய விரதம் இருந்துவந்த சமயம். அப்படி ஒரு கிராமத்தில் அவர் தங்கியிருந்தபோது, ஒரு நாள் ஒரு விவசாயி, பெரியவரை மிகவும் பிரயாசைப்பட்டு சந்தித்தார்.

அவரிடம் துளியும் உற்சாகம் இல்லை. முகமும் இருளடைந்து போய் இருந்தது. வாயைத்திறந்து தன் துன்பங்களைப்பற்றி கூற அவசியமே இல்லாதபடி, பார்த்த மாத்திரத்திலேயே அவரின் துன்பம் பெரியவருக்கு விளங்கி விட்டது.

இருந்தும் அந்த விவசாயி,

"சாமீ... ஏண்டா உயிரோட இருக்கோம்னு இருக்கு. பேசாம குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கலாமான்னு கூடத் தோணுது. ஒரு மனுஷனுக்கு வாழ்க்கைல போராட்டம் இருக்கும். ஆனா, என்னைப் பொறுத்தவரை, போராட்டமே வாழ்க்கையா இருக்கு" என்று துயரத்தைச் சொல்லி அழுதார்.

பெரியவர் அவரிடம், "குலதெய்வத்துக்கு ஒழுங்கா பூஜை செய்யறியா" என்று கேட்டார்.

"குலதெய்வமா. அப்படின்னா." திருப்பிக் கேட்டார் அவர்.

"சரிதான். உங்க குலதெய்வம் எதுன்னே தெரியாதா."

"ஆமாம் சாமி.. வியாபார விஷயமா எங்க முன்னோர்கள் பர்மா போயிட்டாங்க. பல காலம் அங்க இருந்துட்டு திரும்பிவந்த குடும்பம் எங்க குடும்பம். என் பாட்டன்ல ஒருத்தருக்கும் கடவுள் நம்பிக்கை இல்லாததால் அவர் பிள்ளைகளும் அவரைப் பார்த்து அப்படியே வந்துட்டாங்க. நாங்கள்ளாம் அந்த வழில வந்தவங்கதான்" என்றார்.

"உன் முன்னோர்கள் யாராவது இப்போ உயிரோட இருக்காங்களா."

"ஒருத்தர் கிராமத்துல இருக்கார். என் அப்பா வழிப் பாட்டனார் அவர்"

"அவர் கிட்டப்போய் உங்க குலதெய்வம் பத்திக் கொஞ்சம் கேட்டுண்டு வா"

"ஏன் சாமீ.... அந்த சாமி எதுன்னு தெரிஞ்சு கும்பிட்டாத்தான் என் பிரச்சனை தீருமா."



"அப்படித்தான் வெச்சுக்கோயேன்"

"என்ன சாமீ. நீங்க.. ஊர்ல எவ்வளவோ கோயில் இருக்கு. அங்க எல்லாமும் சாமிங்க தான் இருக்கு. அப்ப அதுக்கெல்லாம் சக்தி இல்லையா."

"நான் அப்படிச்சொல்லவே இல்லையே."

"அப்ப இந்த சாமில ஒண்ணக் கும்பிடச் சொல்லாம, குலதெய்வத்த தெரிஞ்சிட்டு வரச் சொல்றீங்களே."

"காரணமாத்தான் சொல்றேன். **ஓட்டைப் பாத்திரத்துல எவ்வளவு தண்ணி பிடிச்சாலும் நிக்காது.** நீ, என்ன மாதிரி எதுவும் வேண்டாம்கற சன்னியாசி இல்லை. வாழ்வாங்கு வாழ விரும்பற குடும்பம்தான். எனக்குப் பாத்திரமேகூட தேவையில்லை. ஆனா, உனக்கு பாத்திரம்தான் பிரதான தேவை. பாத்திரம் இருந்தால்த் தானே எதையும் அதுலே போட்டு வைக்க முடியும்.

அப்படிப்பட்ட பாத்திரம் ஓட்டையா இருந்தா, அதுல எதைப்போட்டாலும் அந்த ஓட்டை வழியா வெளியே போகுமா... போகாதா."

"அப்போ குலதெய்வம்தான் பாத்திரமா.. அது தெரியாததால ஓட்டைப் பாத்திரமாயிடிச்சுங்க நீங்களா."

"நீ, கேள்வி கேட்காம உன் குலதெய்வம் எதுங்கறத தெரிஞ்சு, அந்தக் குலதெய்வத்தைத் தேடிப்போய் சாஷ்டாங்கமா உடம்பு தரையிலே படும்படி நமஸ்காரம் பண்ணிட்டு வா. உனக்கு அப்புறமா விளக்கமா சொல்றேன்" என்று அவரை அனுப்பி வைத்தார்.

அவரும் ஒரு பத்துநாள் கழித்து, "சாமீ நீங்க சொன்னதைச் செய்துட்டேன். எங்க குலதெய்வம் 'பேச்சாயி'ங்கற ஒரு அம்மன். அதோடக் கோயில் ஒரு மலை அடிவாரத்துல இடிஞ்சிபோய் கிடந்தது. யாருமே போகாம விட்டதால, கோயில் புதர் மூடிடுச்சு. நானும் என் மக்களும் போய்ப் புதரை எல்லாம் வெட்டி எறிஞ்



ஆன்மிகமலர் மெயில் புக்

சோம். அங்க ஒரு நடுகல் தான் 'பேச்சாயி!' ஏதோ எங்களால முடிஞ்ச அளவுக்கு அதுமேல பால ஊத்தி அபிஷேகம் செஞ்சு, கற்பூரம் காட்டி கும்பிட்டு வரேன்."என்றார்.

"சபாஷ்... அந்தக் கோயிலை நல்லபடியா எடுத்துக்கட்டு. தினசரி அங்க விளக்கு எரியும்படியா பார்த்துக்கோ! உன் கஷ்டங்கள் தானா நீங்கிவிடும். பேச்சாயி பூவும் பொட்டுமா ஜொலிச்சா, உன் குடும்பமும் ஜொலிக்கும்" என்றார் பெரியவர்.

"சாமீ நிறைய விளக்கமெல்லாம் சொல்றதா சொன்னீங்களே ... எதுவுமே சொல்லலியே."

"அடுத்த வருஷம் இதே தேதிக்கு வா அப்ப சொல்றேன்."

"நான் சொன்னதை மறந்துடாதே. பேச் சாயியை விட்டுடாதே."

அவரும் அவ்வாறே செய்தார். ஒரு வருடமும் ஓடியது. அவரும் பெரியவரைக் காண திரும்ப வந்தார். இந்தமுறை அவரிடம் ஓர் செல்வச் செழிப்பு தெரிந்தது. பெரியவரை ஒன்றும் சும்மா பார்க்க வரவில்லை. தட்டு நிறைய பூ, பழம் இவற்றோடு கொஞ்சம் பணம் என்றுதான் முன்னால் வந்து நின்றார். பெரியவரும் ஏறிட்டார்.

"சாமீ இப்போ நான் நல்லா இருக்கேன். பேச்சாயி புண்ணியத்தில பிள்ளைகளும் நல்லா இருக்காங்க. இதுக்கு வழிகாட்டின பெரியசாமி நீங்கதான்! எனக்கு விளக்கத்த மட்டும் இன்னும் தராமலே இருக்கீங்க... இந்த அதிசயம் எப்படி நடந்தது?" என்று அவர் திரும்பவும் கேட்டார். பெரியவரும் திருவாய் மலரத் தொடங்கினார் அது.

ஒரு வருடம் கழித்து திரும்ப வந்த பர்மாக் காரரிடம் 'குலதெய்வம்' என்பது குறித்து பெரியவா சொன்னது மிகவும் கவனமாக அனைவருமே அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

"நம் முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வம்தான் குலதெய்வமாகும். முன்னோர்கள் என்றால், நமக்கு முன் பிறந்த எல்லோருமே முன்னோர்கள்தான்.

ஆனால் இங்கே முன்னோர்கள் என்றால், நாம் நம் தந்தைவழிப் பாட்டன், பாட்டிமார்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தந்தைவழிப் பாட்டன்மார் வரிசையில், மிகப்பெரிய ஒழுங்கு ஒன்று இருப்பதைக் கூர்ந்து கவனித்தால் உணரலாம். அதுதான் "கோத்திரம்" என்னும் ஒரு ரிஷியின் வழி வழிப் பாதை.

பிற கோத்ரத்திலிருந்து பெண்கள் வந்து இந்த வழி வழிப்பாதையில் நம் தாத்தாக்களின் வாழ்க்கைத் துணையாகக் கை பிடித்திருப்பார்கள். எக்காரணம் கொண்டும் ஒரே கோத்திரத்தில் பெண் சம்பந்தம் ஏற்பட்டிருக்காது. இதனால், ரிஷி பரம்பரையானது சங்கிலிக்கண்ணி போல அறுபடாமல், ஒரே சகோதரத்துவத்தோடு வந்த வண்ணம் இருக்கும். இது ஒரு முக்கியமான ஒழுங்கு சார்ந்த விஷயமாகும்.

அடுத்து, இவர்கள் அவ்வளவு பேருக்குமே நக்ஷத்திரம் வேறாக, உடலமைப்பு வேறாக, குணப்பாடுகள் வேறாகவும் இருக்கும்.

அதுதான் இயற்கையும் கூட. ஆனால், கோத்திர வழி மாறாதபடி இவர்கள் நம் குல தெய்வம் என்னும் தெய்வ சான்னித்தியத்தில் கைகூப்பி நின்றிருப்பார்கள். தலைமுடி கொடுத்திருப்பார்கள். காது குத்துவது போன்ற வழிவழிச் செயல்பாடுகளும் நடந்துமிருக்கும்.

இந்த உலகில் ஆயிரம் கோயில்கள் இருக்கலாம். அந்தக் கோயில்களுக்கு அவர்கள் போயிருக்கலாம். போகாமலும் இருக்கலாம். அதற்கு உத்தரவாதம் இல்லை.

ஆனால் குலதெய்வக்கோயில்களுக்கு, நாம் பக்தி என்கிற ஒன்றை அறிவதற்கு முன்பே, நம் தாய் தந்தையரால் அங்கு கொண்டு செல்லப்பட்டு, வணங்க வைக்கவும் படுகிறோம்.

இதன்படிப் பார்த்தால், குலதெய்வ சந்நிதியில் சென்று நாம் நிற்கும்போது, நம் பரம்பரை வரிசையில் போய் நிற்கிறோம். இந்த வரிசைத் தொடர்பை வேறு எங்காவது, எந்த விதத்திலாவது உருவாக்க முடியுமா."

பெரியவர் சொல்லச்சொல்ல, பர்மாக்காரரிடம் பரவசம்

"அது மட்டுமல்ல. ஒரு மனிதனின் பிறப்புக்குப்பின்னே இப்படியொரு பரம்பரை வரிசை இருப்பதை நினைக்கக்கூடத் தெரியாமல், அதிக பக்ஷம் இருபாட்டன் பாட்டி பெயர்களுக்கு மேல் தெரியாமல் அல்லவா நம் வாழ்க்கைப் போக்கு உள்ளது.

ஒரு குடும்பத்தைப் பொறுத்தவரையில் அந்த இறைசக்தி குலதெய்வமாக, அவர்களுக்கான ஒரு பெயரில் வெளிப்படுகிறது. இப்படிச் சொல்வது கூட ஒரு தவறு. வெளிப்பட வகை செய்யப்பட்டது. அதுவும் யாரால். நம் முன்னோர்களால். அவர்கள் யார். நம்முடைய தொடக்கங்கள்..

நாம் யார்? அந்தத்தொடக்கத்தின் தொடர்ச்சி மொத்தத்தில் நாம் வேறு அவர்கள் வேறு இல்லை. இந்த வழிவழிப்போக்கில் ஒருவர் மூட்டை மூட்டையாகப் புண்ணியத்தைக் கட்டியிருக்கலாம். இன்னொருவர் பாவமே கூட பண்ணியிருக்கட்டுமே!

நாம் அங்கேபோய் நின்று நம் பொருட்டு பிரத்யேகமாக வெளிப்படும் அந்த இறைசக்தியைத் தொழும்போது, அவர்களும் பித்ருக்களாக விண்ணில் இருந்து பார்க்கிறார்கள். நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

இது எத்தனை தூரப் பார்வையோடு, வடிவமைக்கப்பட்ட ஒரு விஷயம்."

பெரியவர் விளக்கி முடிக்க வந்திருந்த கூட்டம் சிலிர்த்துப்போனது.



## இயற்கை மருந்து

**வெங்காயம்:** பச்சை வெங்காயத்தை கடித்து மென்று சாற்றை விழுங்க பல் வலி குறையும். பச்சை வெங்காயத்திலுள்ள காரத்தன்மையானது பல்லிலுள்ள கிருமிகளை அழிப்பது மட்டுமல்லாமல் பல் சொத்தையையும் தடுக்கும்.

**கொய்யாப்பழ இலை:** வீட்டில் கொய்யா மரம் இருந் தால் இரண்டு இலைகளைப் பறித்து வாயில் போட்டு மென்று, அதன் சாறை வாயில் சில நிமிடங்கள் இருக்கும்படி செய்யலாம்.

**கால்சியம் உணவுகள்:** பல் வலி உள்ளவர்கள் அதிக சூடான அல்லது அதிக குளிர்ச்சியான உணவை தவிர்க்கவும். கால்சியம் சத்துக்கள் நிரம்பிய உணவு வகைகளை உண்ணவும். நெல்லிக்காய், பால், வெண்ணை, எலுமிச்சை போன்றவற்றை முறையாக உண்டு வர பற்கள் பலமடையும்.

**நல்லெண்ணெய்:** காலையில் எழுந்தவுடன் நல்லெண்ணெயை சிறிது வாயிலிட்டு 15 நிமிடங்கள் கொப்பளிக்க வெள்ளை நிறத்தில் நுரைத்துக் கொண்டு வரும். அதனை துப்பி விடவும். இவ்வாறு சில நாட்கள் செய்ய வாயிலுள்ள பிரச்சனைகள் அனைத்தும் விலகும்.

**இஞ்சி சாறு:** இஞ்சிச்சாற்றை லேசாக சூடுபடுத்தி வாய் கொப்பளித்து வர பல்வலி குறையும். சுக்கு பொடியை வலியுள்ள இடத்தில் வைத்து அழுத்தி விடவும். சுக்கு வீக்கதிலுள்ள கேட்ட நீரை உறிஞ்சி, பல் வலியை போக்கும்.

**சூடம்:** சூடத்தை பல் வலி இருந்த இடத்தில் வைத்து கடித்தால், சிறிது நேரத்தில் பல் வலியானது நின்றுவிடும்.


ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரா் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்

8825844033



# ஆனி மாத ராசிபலன்கள்



## மேஷம்

எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றிபெறும் மேஷராசியினரே இந்த மாதம் ராசிநாதன் செவ்வாய் உச்ச நிலையில் இருந்தாலும் அவரின் பாதசார சஞ்சாரத்தால் மனதில் தெம்பு உண்டாகும்.

மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். உணவு கட்டுப்பாட்டில் கவனம் தேவை.

கலைத்துறையினருக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போதும் வெளியூர்களுக்கு செல்லும் போதும் கூடுதல் கவனம் தேவை. சூரியன் சஞ்சாரத்தால் முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண்தகராறு ஏற்படலாம். நிதானமாக செயல்படுவது நல்லது.

மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். வீண் கவலையை தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்

எந்த நிலையிலும் அடுத்தவர் பற்றி ரகசியங்களை வெளியே சொல்லாமல் மனதில் வைத்துக்கொள்ளும் இயல்புடைய ரிஷபராசியினரே இந்த மாதம் மாதம் தனஸ்தானத்தில் சூரியன் ருூ புதன் ருூ ராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராசிநாதன் சுக்கிரனால் எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். பணவரத்து அதிகரிக்கும். செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும்.

குடும்பாதிபதி புதன் ஆட்சியாக இருக்கிறார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் விருந்து நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

மாணவர்களுக்கு பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

## மிதுனம்

எதையும் திட்டவட்டமாக பேசி காரியங்களில் குழப்பம் இல்லாமல் வெற்றிகரமாக செய்து முடிக்கும் ஆற்றலை உடைய மிதுன ராசியினரே இந்த மாதம் ராசியில் சூரியன் – ராசிநாதன் புதன் – ராசியாதிபதி புதன் ராசியில் சூரியனுடன் சேர்க்கை பெற்று நிபுணத்துவ யோகம் பெற்று சஞ் சாரம் செய்வதால் எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் கடுமையான முயற்சிகள் தேவைப்படும். பணவரத்து கூடும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வாழ்க்கை துணையையும் குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்திற்காக கூடுதலாக உழைக்க வேண்டியது இருக்கும்.

மாணவர்களுக்கு எதிர்காலம் பற்றிய திட்டங்கள் மனதில் தோன்றும். கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.

## கடகம்

எப்போதும் ஒரே கருத்தை கொள்ளாமல் அவ்வப் போது எண்ணங்களையும் கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் குணமுடைய கடக ராசியினரே நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். இந்த மாதம் சுக ஸ்தானதிபதி சுக்கிரன் – ராகு,இருப்பது பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானதிபதி செவ்வாய் உச்சம் அடைந்துருூ சனி, ஆறாம் ஸ்தானத்தில் அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் – புதன் – என கிரகங்களின் அமைப்பு இருக்கிறது. சூரியனும், புதனும் இணைந்து புத ஆதித்ய யோகத்தை தருவதால் தொழில் தொடர்பான விஷயங்களில் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் நிலை வரலாம். பணவரத்து திருப்தி தரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான நிலை காணப்படும். பிள்ளைகளுக்காக கூடுதல் நேரம் செலவு செய்ய வேண்டி இருக்கும்.

மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பதில் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்களின் ஆதரவுடன் படித்து தேர்வில் வெற்றி பெறுவீர்கள்.

## சிம்மம்

கம்பீரமான தோற்றத்தை உடைய சிம்ம ராசியினரே நீங்கள் சுறுசுறுப்பாகவும் அடுத்தவரை அடக்கி ஆளும் திறமையும் பெற்று இருப்பீர்கள். இந்த மாதம் ராசியில் லாப ஸ்தானத்தில் சூரியன் – புதன் – என கிரகங்களின் அமைப்பு இருக்கிறது. ராசியாதிபதி சூரியன் ராசிக்கு 11ல் புதனுடன் சேர்ந்து நிபுணத்துவ யோகத்தை தருவதால் மனதில் தெளிவு உண்டாகும். ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். பயணம் லாபகரமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

குடும்பாதிபதி புதன் லாபஸ்தானத்தில் ஆட்சியாக இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம். கவனம் தேவை. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். குழந்தைகளுடன் நிதானமாக பேசி அவர்களுக்கு எதையும் புரிய வைப்பது நல்லது. அவர்களது முன்னேற்றத்துக்காக பாடுபடுவீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியை பற்றிய பயம் நீங்கும். குழப்பம் இல்லாத தெளிவான மனதுடன் பாடங்களை படித்து வெற்றி பெறுவீர்கள்.

## கன்னி

கலகலப்பாக பேசி பழகாமல் ஒதுங்கி இருப்பதை தவிர்த்து அனைவரிடமும் இயல்பாக பேசி வருவது கன்னி ராசியினருக்கு வெற்றிக்கு வழிவகுக்கும். இந்த மாதம் பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் கேது – தொழில் ஸ்தானத்தில் சூரியன் – ராசிநாதன் புதன் – சுக்கிரன்,ராகு லாபஸ்தானத்தில் என கிரகங்கள் வலம் வருகிறார்கள். ராசியாதிபதி புதன் ராசிக்கு 10ல் சூரியனுடன் சேர்க்கை பெற்று சஞ்சாரம் செய்வது மற்றவர்களின்




மு.கிருஷ்ணமோகன்
ஸ்ரீ காலபைரவி
ஜோதிட நிலையம்
தொ.பே.எண்:
08526223399 / 09843096462


**வாசகர்களுக்கு வேண்டுகோள்...**

ஜோதிடர் கிருஷனமோகன் எழுதிய மாதப் பலன்களில் விரிவான பலன்களை படிக்க ஆன்மிகமலர்.காம் இணையதளத்தில் பலன்கள் பகுதியில் படித்து பயன்பெறலாம்

ஆதரவு கிடைக்க செய்யும். புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். ஆனால் பயணங்களின் போது உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். உறவினர் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. அனுபவப் பூர்வமான அறிவுத் திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள்.

மாணவர்களுக்கு பெற்றோர், ஆசிரியர் கூறியபடி செயல்படுவது கல்வியில் வெற்றி பெற உதவும். மனோ தைரியம் கூடும்.

## துலாம்

எதையும் எதிர்த்து நின்று சமாளிக்கும் திறமை உடைய துலாம் ராசியினரே உங்கள் மனம் குழப்பம் இன்றி தெளிவாக இருக்கும். இந்த மாதம் தன ஸ்தானதிபதி உச்சம் பெற்ற செவ்வாய் – பாக்கிய ஸ்தானத்தில் சூரியன் – புதன் – ராசிநாதன் சுக்கிரன்,ராகு பத்தாம் ஸ்தானத்தில் என கிரகங்களின் இருப்பு இருக்கிறார்கள். பாக்கியஸ்தானத்தில் சூரியனுடன் புதன் சேர்க்கை பெற்று இருப்பது நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள்.

குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதியை தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். வீண் செலவை குறைப்பது நல்லது.

## விருச்சிகம்

அறிவும், ஆற்றலும் ஒருங்கே பெற்ற விருச்சிக ராசியினரே நீங்கள் பிடிவாத குணத்தை தளர்த்திக் கொண்டால் எதிலும் வெற்றி நிச்சயம். இந்த மாதம் ராசியில் ராசிநாதன் செவ்வாய் உச்ச பலத்தில் மூன்றாம் வீட்டீல் இருந்து தைர்யஸ்தானத்தை அள்ளி தர போய்கிறார் – அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் – புதன் – என கிரகங்களின் சுழற்சி இருக்கிறது. ராசியாதிபதி செவ்வாய் பலத்தால் புத்தி கூர்மையுடன் எதையும் செய்வீர்கள். எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும்.

குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சேரும். நல்லது கெட்டது அறிந்து செயல்பட்டு நன்மை கிடைக்க பெறுவீர்கள். பணவசதி கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்களிடம் அன்பு அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு எதையும் அவசரமாக செய்யாமல் யோசித்து செயல்படுவது நல்லது. கல்வியை பற்றிய கவலை குறையும்.

## தனுசு

அடக்கமான சுபாவம் உடைய தனுசு ராசியினரே நீங்கள் தன்மையாக எல்லோரிடமும் பழக கூடியவர்கள். இந்த மாதம் 7ம் ஸ்தானத்தில் சூரியன் – புதன் – லாப ஸ்தானத்தில் ராசிநாதன் குரு – 2ம் ஸ்தானத்தில் செவ்வாய் உச்ச பலம் பொருந்தி ருூ சனி என கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது.மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். ராசிக்கு 7ல் சூரியன் சஞ்சாரம் செய்வதால் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது.

குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

மாணவர்களுக்கு கவன தடுமாற்றம் இல்லாமல் பாடங்களை படிப்பது நன்மை தரும். சக மாணவர்களிடம் எச்சரிக்கையாக பழகுவது நல்லது.

## மகரம்

எந்த ஒரு வேலையையும் நுணுக்கமாக செய்து மற்றவர்களின் பாராட்டை பெறும் மகர ராசியினரே இந்த மாதம் ராசியிலே செவ்வாய் , கேது, ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன் – புதன் – பத்தாம் ஸ்தானத்தில் குரு – ஏழாம் ஸ்தானத்தில் ராகு, என கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. ராசிக்குள் கேது, செவ்வாயுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதால் பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். ஆறாமிடத்தில் சூரியன் சஞ்சாரம் செய்வதால் இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும்.

தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம்.

மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் குறிக்கோளுடன் செயல்படுவீர்கள்.

## கும்பம்

எடுத்த காரியத்தை எத்தனை குறுக்கீடுகள் வந்தாலும் அதை சமாளித்து செய்து முடிக்கும் திறன் உடைய கும்பராசியினரே இந்த மாதம் ராசிக்கு பனிரெண்டில் கேது, செவாய் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன் – புதன் – ஆறாம் ஸ்தானத்தில் சுக்கிரன் ருூ ராகு, ஒன்பதில் குரு – ராசிநாதன் பதினோரம் இடத்தில் சனி என கிரகங்கள் அருளாட்சி செய்கிறார்கள். கவுரவ பிரச்சனை உண்டாகும். நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. சூரியன் சஞ்சாரம் பணவரத்தை தரும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனை தீரும்.

குடும்பத்தில் மனைவி குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் நண்பர்கள் உதவ முன்வந்தாலும் உதவி தாமதமாக கிடைக்கும். சகோதரர்களால் மனவருத்தம் உண்டாகும்படியான சம்பவம் நேரலாம் கவனம் தேவை.

மாணவர்களுக்கு சக மாணவர்கள், நண்பர்களிடம் அதிகம் பேசி பழகுவதை தவிர்ப்பது நல்லது. பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நன்மை தரும்.

## மீனம்

எதை செய்தாலும் தன்னம்பிக்கையை கொண்டு சொந்த முயற்சியிலேயே செய்து வெற்றி பெறும் மீன ராசியினரே இந்த மாதம் சூரியன் – புதன் ருூ சுக ஸ்தானத்திலும் – அஸ்டம ஸ்தானத்தில் ராசிநாதன் குரு – ராகுவும் , சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் – லாப ஸ்தானத்தில் செவ்வாய் உச்ச பலத்தோடு – சனியும், பத்தாம் ஸ்தானத்தில் லாப ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சாரம் செய்கிறார்கள். தனாதிபதி செவ்வாய் பாக்கியஸ்தானத்தில் இருக்கிறார்.

பணவரத்து அதிகரிக்கும். அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம் கவனம் தேவை. சூரியன் சஞ்சாரம் ராசிக்கு நான்கில் இருப்பதால் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.

குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் அனுசரித்து செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. விருந்தினர்கள் வந்து செல்வார்கள்.

மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். விளையாட்டுகளில் கவனம் செலுத்துவதுடன் கல்வியிலும் கூடுதல் கவனம் நன்மை தரும்.

# பிறப்புக்கு முன்புள்ள உணர்வுநிலை



குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: "கருப்பைக்குள் புகுந்ததும் நீங்கள் கூறுகிறீர்கள்: 'நான் என்ன செய்துவிட்டேன்? நான் இவ்வளவு காலமாக, கட்டுப்படுத்துகின்ற அழியும் தேகத்திலிருந்து விடுபட்டு, பளுவற்ற ஓர் ஒளி உடலில் பறந்தவாறு இருந்தேன். இப்போது நான் மீண்டும் ஒரு பூதஉடலில் அகப்பட்டுக்கொண்டேன்'. இருந்தபோதிலும் கருப்பையிலிருக்கும் ஒன்பது மாதங்கள் இந்த புதிய நிலைமைகளுக்கு பழக்கப்பட்டுவிடுகிறீர்கள்.

அதுதான் தண்டனை. அந்த ஒன்பது மாத இருட்சிறை வாழ்க்கையில் யாரோ ஒருவர் மூலமாக நீங்கள் சுவாசிக்கவேண்டும், யாரோ ஒருவர் மூலமாக நீங்கள் உண்ணவேண்டும். உங்கள் இரத்தத்தையும் அதனுடைய சுற்றோட்டத்திற்கான சக்தியையும் யாரோ ஒருவர் மூலமாகப் பெறவேண்டும். நீங்கள் புறத்துணையை சார்ந்திருக்கிறீர்கள். உங்கள் ஆன்மா இறைவனிடம் கதறுகின்றது. "இந்தச் சிறையிலிருந்து வெளியேற்றுங்கள்! என்னால் பார்க்கமுடியவில்லை; என்னால் கேட்க முடியவில்லை. நான் கட்டுண்டுள்ளேன்."

நரகம் அல்லது பிராயசித்தம் செய்யக்கூடிய இடம்ஒன்று இருக்குமேயானால், அது தாயின் கருப்பையில் இருக் கும் அந்த ஒன்பது மாதங்கள்உதவியின்றி, இருளில் ஒரு மரத்தைப்போல ஒரே இடத்தில் பிணைக்கப்பட்டு, பழைய நினை வுகள் எப்பொழுதாவது மட்டும் வந்து, பின்பு நித்திரையில் ஆழ்ந்து விடுகின்ற நிலை. பழைய ஞாபகங்கள் வரும்பொழுதுதான் நீங்கள் உங்கள் அன்னையின் சரீரத்தினுள் தத்தளிக்கிறீர்கள். நான் எனது உணர்வுநிலையை, பிறப்பதற்கு முன்புள்ள இந்த நிலைகளுக்குக் கொண்டுசென்றுள்ளேன். எனவே நான் என்ன கூறுகிறேன் என்பது எனக்குத் தெரியும். ( எங்கும் நிறைந்த இறைவனுடன் அகமுகமாக ஐக்கியமாவதன் மூலமாக முன்னேற்றமடைந்துள்ள ஒரு யோகியால், எல்லா ஜீவராசிகளின் அனுபவங்களையும் அனுதாபத்துடன் கண்டுணரமுடியும்.) அன்னையின் தேகத்தினுள் சிசுவினுடைய நித்திரையும் விழிப்பும் அவளுடைய நித்திரையையும் விழிப்பையும் சார்ந்திருப்பதில்லை. சிசுவிற்கு அசைய வேண்டுமென்ற விருப்பமானது, ஆன்மாவின் கடந்த காலத்திலிருந்து வருகின்ற ஒரு நினைவாகும். ஆகவே அந்த சிசு களைப்பற்று நித்திரையில் ஆழ்ந்துவிடும்வரை அன்னையின் சரீரத்தினுள் அமைதியின்றி அசைகின்றது. பின்பு சிறிது நேரத்திற்கு விழிப்புற்று மீண் டும் அசைகின்றது.; பசியை உணர்ந்து, அன்னையின் இரத்தத்திலுள்ள போஷாக்கு மூலம் அப் பசியாறுதலையும் உணர்கின்றது.

சிசுவானது அன்னையினுடைய இருதயத் துடிப்பு மற்றும் இரத்த ஓட்டத்தின் அதிர்வுகளைச் சிறிதளவு கேட்கிறது; இந்தச் சப்தங்களால் தன்னுடைய சரீரத்தைப் பற்றிய உணர்வு பெறப்பட்டு, அது விடுதலையை விருபுகின்றது. இவ்வாறாக, ஆன்மாவினுடைய முதல் சாகசம், இரண்டு கருத்துக்களிடையே ஏற்படும் போராட்டமாகும். மானுட வடிவில் பூமிக்குத் திரும்பும் விருப்பம் மற்றும் உருவம் இல்லாததால் உண்டாகும் சுதந்திரத்தை உணரும் விருப்பம்.

ஆன்மாவின் மானுட உறை, மிகச்சிறிய வாலுடன் கூடிய மீனைப்போன்ற உருவுடன் ஆரம்பிக்கின்றது. அந்த வடிவம் கருப்பையில் சுருண்டு கிடக்கும் ஒரு பிராணி உருவமாக வளர்ச்சியுறுகிறது. சென்ற பிறவியின் நினைவு எப்பொழுதாவது ஏற்பட்டு, கரு அசைகின்றது. அன்னையின் சரீரத்தினுள் கரு மானுட வடிவமாக வளர்ச்சியடைய ஆரம்பிக்கும்பொழுது, போராட்டம் பெரிதாகிறது. ஆத்மா, "என்னை வெளியே விடு" எனக் கதறுகின்றது. இந்த எண்ணம் அதிக வலுவடையும்பொழுது குழந்தை பிறக்கின்றது. உரிய காலத்திற்கு முன்பாகப் பிறக்கும் குழந்தைகள் அதிகப் பிடிவாத குணம் உள்ள ஆன்மாக்கள் ஆவர். தங்கள் அன்னையின் சரீரத்தினுள் ஒன்பது மாதங்கள் தங்கியிருக்க அவர்கள் விரும்புவதில்லை. அதனால் அவர்கள் முன்னதாகவே வெளிவருகின்றனர்."

## வாழ்வின் விசுவாசம்

மேலும் குருதேவர் கூறுகிறார்: "குழந்தை அழுதுகொண்டே இப்பூவுலகை வந்தடைகின்றது; மகான்கள் கூற்றுப்படி இதன் காரணம், ஆன்மா தன் முந்தைய பிறவிகளை நினைவுகூர்கிறது. மேலும் அது இங்குள்ள வாழ்க்கைப் போராட்டத்தை அனுபவிப்பதற்காக மீண்டும் பூமிக்கு வரும் எண்ணத்தை விரும்புவதில்லை. பூவுலகிற்கு வரும் முன்பு ஒரு குழந்தை வழக்கமாக தனது கரங்களை கூப்பி பிரார்த்தனை செய்யும் வண்ணம் இருப்பதும் கூட, இந்த ஞாபகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதாகும். அது இறைவனிடம், "தயவு செய்து எனக்கு தேகத்துடன் கூடிய பிறவியை மீண்டும் தரவேண்டாம்," எனப் பிரார்த்திக்கின்றது.

குழந்தையின் அழுகையைப்பற்றிய உடற்கூறு இயலின் விளக்கமானது, சுவாசிக்கும் செயல்முறையை துவங்குவதற்காக நுரை யீரல்கள் திறக்கப்படவேண்டும். மேலும் குழந்தையின் முதல் கதறல், நுரையீரல்களை செயல்படுத்துவதற்காகவும் வாழ்வின் சுவாசத்தைத் துவங்குவதற்காகவும் எடுக்கப்படும் முயற்சியே என்பதாகும். "இறைவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனிதன் ஜீவாத் மாவானான்." பிறக்கும் சமயத்தில்தான் ஆத்மா தேகத்தினுள் புகுகின்றது எனப்பலர் தவறாக நம்புகின்றனர். ஆனால் ஏற்கனவே ஆத்மா அங்கு இல்லாமலிருந்தால், நுண்ணிய மூல உயிர் அணுக்களிலிருந்து சரீரம் விருத்தியடைந்திருக்காது. பிறக்கும் முன்பே கருவிலிருந்து ஆன்மா பிரிந்துவிட்டால், குழந்தை இறந்தபடி பிறக்கும். ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதியபொழுது, முதலில் இறைக்கட்டளைப்படி உலகில் வாழ்வதற்கு பிராணவாயுவை சுவாசிக்கவேண்டும் என்ற உண்மையை குறிக்கிறது.

சிசு பிறந்தவுடன் வெளிச்சத்தைக் கண்டு கண்களை சிமிட்டுகிறது; அது சப்தங்களைக் கேட்கிறது; அது மணத் தை நுகர்கிறது; சுவைக்கின்றது. மேலும் அது சுவாசிக்கின்றது. மீண்டும் ஒரு ஸ்தூல உடலைப் பெற்றுவிட்டது. மாயை ("வாழ்க்கை" தேகத்தையும் சுவாசத்தையும் சார்ந்துள்ளது என்ற பிரபஞ்ச மாயை) யில் சிக்குண்டதும் பிறக்குமுன்பு

36
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

இருந்த பிறப்பதற்கான அதனுடைய எதிர்ப்பு, அதன் முதல் சுவாசத்துடன் முடிந்துவிடுகின்றது. இந்த சட உலகம் மீண்டும் ஒருமுறை அதற்குக் கவர்ச்சியாகத் தெரிகிறது.

நாட்கள் செல்லச்செல்ல சிசுவானது தன்னுடைய தேகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பெருமுயற்சி செய்கிறது. கைகளையும் கால்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் எத்தனை தடவைகள் அவற்றை காற்றில் திரும்பத்திரும்ப உதைத்தவண்ணம் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள்! இந்த அனைத்து செயல்களும் ஆன்மாவினுடைய முற்பிறவியின் ஞாபகத்தால் அடிமனதின் மூலம் இயக்கப்படுகின்றன. அந்த ஞாபகமானது என்றும் உள்ளது. நீங்கள் இயல்பாகவே மரணத்தைக்கண்டு அஞ்சுவது ஏனெனில் பலதடவைகள் அந்த அனுபவத்தைக் கடந்து வந்திருப்பதை நீங்கள் வலியை கண்டும்கூட அஞ்சுகிறீர்கள்; ஏனெனில், இதற்கு முன்பும் பலதடவைகள் துன்புற்றிருக்கிறீர்கள்.

இவ்வுலக முரண்பாடான மன அழுத்தங்களால் குழந்தை மிகவும் தத்தளிக்கிறது. இது ஓர் இரங்கத்தக்க வாழ்க்கை. ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் ஓரளவு சுதந்திரத்தை அளிப்பது நல்லது. அளவிற்கு மிஞ்சிய சுதந்திரம் கொடுக்கப்பட்ட இளம் வயதினர், பிற்காலத்தில், “இதை நான் செய்யக்கூடாது என வெகுகாலத்திற்கு முன்பே எனக்குக் கூறப்பட்டிருக்கவேண்டும்; அப்படி கூறப்பட்டிருந்தால், நான் இப்போதுள்ள மாதிரி ஆகியிருக்கமாட்டேன்,” என வருந்தக்கூடும். ஒருவர் இளமைப்பருவம் அடையும்வரை கடந்து வரவேண்டிய சகல உடல் மற்றும் மன கஷ்டங்கள் அனைத்தையும் நினைத்துப்பாருங்கள். வாழ்க்கையின் அந்தப் பருவத்தில் ஐம்புலன்களும் அதிக சுறுசுறுப்பாக செயற்படுகின்றன. மேலும் இளைஞன் தன்னுடனேயே பெரிய அகப்போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடுகின்றது. புலன்களுடனான போராட்டம் மிக பயங்கரமானது. இளமையின் இந்த சாகசத்தை வென்று, வாழ்க்கையின் இந்தக் கிளர்ச்சியினூடே வெற்றிகரமாகப் பயணிப்பது ஒரு பெரும் அனுபவமாகும்.”

இறைவன் எனக்கு உணரச்செய்தவற்றை வாசகர்களுக்குத் தெரிவிக்க நான் கடமைப் பட்டுள்ளேன்.

நாம் அனைவரும் தாயின் கர்ப்பத்திலிருந்து பூமியில் பிறந்து வரும்வரை ஒரு குறிக் கோளுடன் இருப்பதாகவும் இறைவன் நம்மை யெல்லாம் படைக்கும்போதே, “பூமிக்குச் சென்றால் வேறு எதையும் ஆசைப்படாதே; நீ எங்கிருந்து பூமிக்குச் சென்றுள்ளாயோ திரும்ப அதே இடத்திற்கு வந்துசேருவீர்” என்று சொன்னதாகவும் கூறுகின்றனர். தாயின் கர்ப்பத்தை விட்டு குழந்தை வெளியில் வந்த உடனே, உள்ளே குழந்தையின் அழுகுரலுக்கு ‘எங்கே நான் வந்துள்ளேன்’ என்பதுதான் பொருளென்றும் கூறுகின்றனர். ஆனால் குருதேவர் கூறியுள்ளதை பார்க்கும்போது அது சரியான காரணத்துடன் விஞ்ஞானப் பூர்வமாக இருப்பதாக தெரியவருகிறது. இறைவன்தான் ஒவ்வொரு ஆத்மாவிடமும் சொல்லி அனுப்பியதாகவே இருந்தாலும் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வந்தபின்னர், நாட்கள் செல்லச்செல்ல பெரும்பாலானோர்களும் எல்லாவற்றையும் மறந்து மனம்போன போக்கிலே வாழ ஆரம்பிக்கின்றனர். “இவ்வுலகைப் போன்று வேறு எந்த உலகமும் இல்லை; இதுதான் தமக்கு உகந்த இடம்” என்று எண்ணுகின்றனர். இவ்வாறு உலகம் மற்றும் பகட்டான உலகப்பொருட்களின் ஈர்ப்பிற்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு அவன் உலகத்திற்கும் உலகப் பொருட்களுக்கும் அடிமையாகின்றான். இவ்வுலகம்தான் அவனுக்கு சொர்க்கம் என்று எண்ணுகிறான். உலகப்பழக்கவழக்கங்கள் அனைத்திற்கும் அடிமையாகிறான். இவ்வாறி ருக்கையில் தன்னை மீட்டுக்கொள்வது எவ்வாறு?

ஒருவன் தன்னுடைய முற்பிறவிகளில் செய்த நல்ல விஷயங்கள்தான் அவனைக் காப்பாற்றுகிறது. எவ்வாறெனில் வாழ்க்கையில் ஏதாவது திருப்பம் (இறைத்தேடுதல்) ஏற்படுமேயானால் அது அவனுடைய நற்செயல்கள்தான் காரணம். நற்செயல்கள் என்றால் முற்பிறவியில் சிறிதளவாவது அவன் தியானப்பயிற்சி செய்திருக்கவேண்டும். தியானப்பயிற்சி ஒன்று மட்டும்தான் இறைவனை தேடுவதற்கும் அவனை தொடர்புகொள்வதற்கும் பின்னர் அவனை அடைவதற்கும் உள்ள வழி. நல்ல கர்மம் செய்தாலும் பூமியில் வந்து நல்லதை அனுபவித்தாக வேண்டும்.

தீயகர்மத்தின் விளைவை அறுவடை செய்வதற்கும் பூமிதான் இடமளிக்கிறது. ஆனால், ஒருவன், ”இறைவா! நான் அறியாமையினால் தவறு செய்து உன்னைஎன் தந்தையான உன்னை இழந்துவிட்டேன். நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். அறியாமையிலிருந்து எனக்கு உன்னை அறியக்கூடிய ஞானத்தை அருள்வாயாக! எனக்கு நீதான் வேண்டும்” என்று தன் தவறினை உணர்ந்தவாறு இறைவனிடம் பிரார்த்தித்திருந்தால் அந்த பிரார்த்தனையை இறைவன் செவிமடுப்பான்.

தக்க சமயத்தில் உன்னை அழைப்பேன்’ என்று இறைவனும் பதிலளிப்பான். இதுதான் அவனுடைய திருப்பத்திற்குக் காரணமாக இருப்பது. இறைவனை எண்ணி சிறிதளவு தியானம் செய்தாலே அதற்கு நல்ல பலன் உண்டு. அவன் கருணை உள்ளம் கொண்ட ’தாய்’. அன்பானவன். இவ்வாறான பிரார்த்தனையாகின்ற ‘கூக்குரல்’தான் அவனை இறைவன் பக்கம் ஈர்க்கச்செய்கிறது. எல்லாம் இறைவனின் அருளினால்தான் அவனை மேலே கண்டவாறு பிரார்த்தனை செய்யவைக்கிறது. அதற்கும் காரணம் உள்ளது. ஒருவன் எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல் விருப்பு வெறுப்பின்றி செய்கின்ற நற்செயல்கள் அவனை இறைவன் தன்பக்கம் திரும்பச்செய்கிறான். அத்துடன் ஒழுக்கமும் அவனுடன் இருக்கும். ஒழுக்கமுடைய ஒருவனால் மட்டுமேதான் பலனை எதிர்பாராமல் செயல்களைச் செய்யமுடியும். அவன், “இறைவா! நான் உனக்காக மட்டும்தான் வாழுகிறேன். என் வாழ்வில் ஒவ்வொரு நாளும் தாங்கள் எனக்களித்து செய்யவைக்கின்ற ஒவ்வொரு கடமையும் நான் உனக்காகவே மட்டும்தான் செய்கிறேன். எனக்கு நீ வேண்டும். நீ இல்லையேல் நானில்லை இறைவா! ஏதோ ஒரு கட்டாயத்தின் பேரில் நான் இவ்வுலகில் பிறந்து வந்தேன். இங்கே நான் எல்லாவற்றிலும் உன்னைத்தான் காண்கிறேன். இறைவா, இவ்வாறிருக்கையில், நான் உன்னிடத்திலிருந்து பிரதிபலனைப் பெறவா? அது எனக்குத் தேவையில்லை. பிரதிபலன் என்றால் அது நீ மட்டும்தான் எனக்கு வேண்டும் இறைவா! அழியக்கூடிய இவ்வுலகில் நான் பலனை ஆசைப்படுவேனேயானால் அத்துடன் நானும் உன்னிடத்தில் வரமுடியாமல் அழிவை நோக்கிச் செல்லவேண்டியதுதான்! பலனை எதிர்பார்த்தால் ‘அழிவுதான் அதற்கு பரிசு’ என்பதை நீதான் எனக்குக் கற்றுத்தந்துள்ளாய். அதை நான் நன்றாக புரிந்துகொண்டேன் இறைவா! என்னை நீ புரியவைத்தாய். அதுதான் உண்மை. இந்த உலகில் நீ இல்லையெனில் ஒரு புழு, பூச்சிகூட வாழ இயலாது. அனைத்துமே நீதான். நீ இல்லையெனில் எதுவுமே இல்லை. இறைவா! இதை நீ நன்றாகவே எனக்கு புரியவைத்துள்ளாய்; எனக்கு எல்லாவற்றையும் உணர்த்திக்கொண்டிருக்கிறாய்! என்றென்றும் நான் உன் குழந்தையே. நீ என் தந்தை இறைவா! என்னை நீ தான் காப்பாற்றவேண்டும். நான் உன்னைத்தான்; உன்னை மட்டும்தான் எதிர்பார்க்கிறேன்” என்று எப்பொழுதும் பக்தன் கூறிக்கொண்டேயிருப்பான்.

மொத்தத்தில் அவனுடைய மனமும் சிந்தனையும் உலகவியாபாரத்தில் செல்லாது. அப்படியே உலகத்திலிருந்தாலும் அவன் மொத்தத்தில் இறைவனிடத்தில் மட்டும் இறைவனின் சாம்ராஜ்யத்திற்கு ஒரு வானம்பாடிபோல் குருதேவரின் அருளாகின்ற தங்கக்கரத்தைப் பிடித்துக்கொண்டு பறந்து சென்றுகொண்டிருப்பான்.

ஆனால் கெட்ட நடவடிக்கை உள்ளவனானாலும் கெட்ட எண்ணம் உள்ளவனானாலும் இறைவனை அவன் பக்தியுடன் வழிபட்டால் இறைவனுடைய கடைக்கண் பார்வை பேரன்பாகி அவன்பக்கம் திரும்பி வழிய ஆரம்பிக்கும். அது அவன் மனதை மாற்றுகிறது. அதுவும் இறை அருளே ஆகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

அற்புதமான ஆன்மீக செய்திகளை படிக்க பாருங்கள்
www.aanmeegamalar.com



## மகான் ஸ்ரீராகவேந்திரரின் மகிமை!

# நெருப்பில் போடப்பட்ட நவரத்தின மாலை

ஒரு முறை, தஞ்சாவூரில் கடுமையான வறட்சி ஏற்பட, மகான் ஸ்ரீராகவேந்திரரின் அருளை வேண்டி நின்றார் தஞ்சை மன்னர். தனக்கு சந்நியாசம் தந்த நகரமான தஞ்சையில் எழுந்தருளினார் ஸ்ரீராகவேந்திரர்.

மகானின் திருப்பாதங்கள் பட்டதுமே மண்ணும் வளமாகும்; அவர் விரும்பினால் இயற்கையும் வளைந்து கொடுக்கும் என்பதற்குச் சான்றாக... மழை பொத்துக்கொண்டு ஊற்றியது, வறண்டிருந்த மண் வளமானது. பஞ்சம் நீங்கிட ஸ்ரீராகவேந்திரர் செய்த யாகத்தால், காய்ந்து கிடந்த உணவுக் கிடங்கும் நிரம்பத் தொடங்கியது.

மழை தருவித்து, மக்களைக் காத்த மகானுக்கு சிறப்பான பரிசு தர விரும்பினான், தஞ்சை மன்னன். குரு ஸ்ரீராகவேந்திரரின் பாதம் பணிந்து வணங்கி, விலை உயர்ந்த நவரத்தின மாலை ஒன்றைச் சமர்ப்பித்தான். மகான்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் என்றுமே மதிப்பளிப்பதில்லை அல்லவா? மகான் ஸ்ரீராகவேந்திரரும் அந்த மாலையை, தனக்கு முன்பிருந்த அக்னி குண்டத்தில் சேர்த்தார்.

இதனைக் கண்டு பதறிய மன்னன், ‘‘குருவே, அது விலை மதிப்புமிக்க நவரத்தின மாலை... அதனை இப்படி அக்னியில் போட்டுவிட்டீரே” என்று கேட்டான்.

புன்னகைத்த மகான், அக்னி பகவானை வேண்டினார். நவரத்தின மாலை தீயிலிருந்து புதுப் பொலிவுடன் மீண்டும் அவர் கைகளுக்கு வந்தது.

‘‘இந்தா வைத்துக்கொள்” என குரு ஸ்ரீராகவேந்திரர், மாலையினை மன்னனிடம் அளித்தார். தனது தவறை உணர்ந்த மன்னன் குருவின் பாதங்களில் விழுந்து வணங்கி, தன் அறியாமையை மன்னிக்கும்படி வேண்டினான். மன்னிப்புக் கேட்பவர்களை மன்னிப்பது தான், மகான்களின் இயல்பு அல்லவா? மகான் ஸ்ரீராகவேந்திரரும் மன்னனை மன்னித்தார். அந்த நவரத்ன மாலையினை, மூலராமருக்கு அணிவித்து பூஜைகளைத் தொடர்ந்தாராம்.

# பிரம்ம தீப வழிபாடு..!!!

பிரம்ம தீபம் என்பது, விளக்கின் மையப்பகுதியில் சிறு தண்டு இருக்கும் அதில் பருத்திப் பஞ்சு திரி செருகும் ஓட்டை (வழி) இருக்கும், அந்த வழியாக பஞ்சினை நுழைத்து விட்டு அந்த தண்டினை அதற்குரிய இடத்தில் திருகி வைத்து நெய் அல்லது, தேங்காய் எண்ணை அல்லது நல்லெண்ணெய் விட்டு தீபம் ஏற்றி நமது அன்றாட வழிபாட்டினை மேற்கொள்வது. இந்த வகை விளக்கினை பயன் படுத்தும் போது எந்த திசையை நோக்கி விளக்கின் ஜோதி எரிகின்றது என்ற கேள்விக்கே இடமில்லை.

காரணம், திரி எண்ணை கிண்ணத்தின் நடுவிலிருந்து ஒளிர்வதால் எல்லா திசைகளுக்கும் அதன் ஒளி படர்வதால் சகல பாக்கியங்களும் குறைவின்றி நமக்கு கிடைக்கும்.

பித்தளையில் இவ்வகை யான விளக்குகள் எல்லா பாத்திரக் கடைகளிலும் தாராளமாக கிடைக்கின்றது. பிரம்ம தீபம் ஏற்றி வழி பாடு செய்தால் அந்த வீட்டில் ஆனந்தமும், நிம்மதியும் பெருகும்.






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

♦♦♦

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# யாகத்தில் போடப்படும் பொருட்களான ‘அவிர்பவம்’ – ‘ஆவிர்பவம்’ என்றாகியது

இராஜராஜேசுவரி – அம்பாள் சொல்கிறாள். கதையைச் சொல்வதற்கு விதையைப் போடனும். இப்போது என் னை பூஜை பண்ணுவதாக நினைத்துக் கொண்டு, என் படத்தின் கீழே ஒரு வாழை இலை போட்டு, விதையைப் போடு! நெல் விதைகளை இறைத்து வை; கால்படி நெல் வாங்கி இறைத்து ஒரு கும்பம் வைப்பார்கள். எதற்கு? விதையைப் போட்டால் தான், கதையைச் சொல்ல முடியும்.

பகவானுடைய கதையைச் சொல்ல வேண்டும் என்றால் விதையைப் போடனும். நமக்கு அம்பாளுடைய கதையை சொல்லத் தெரியாது. அம்பாள் இந்த லோகத்தில் எப்படி ஆவிர்பவித்தாள்? ஒரு மனிதனின் மீது எப்படி ஆவிர் பவிக்கிறாள்? மறு அம்மனாக, மாரியம்மனாக வரும்போது எப்படி ஆவிர்பவிர்க்கிறாள்?

‘ஆவர்பம்’ – ‘பவம்’ என்றால் உலகம். லோகம். இராஜராஜேசுவரி சொல்கிற விளக்கம் – ‘அவிர்பவம்’ – ‘ஆவிர்பவம்’ என்றாகிவிட்டது. ‘ஆவிர்’ என்றால் என் முன்னே யாகம் செய்து கொண்டு இருக்கிற தீ நான் கொடுத்த பொருள்களை சாப்பிட வேண் டும் என்பதற்காக, ‘ஹவிஸ்’ என்று பெயர் வைத்து, அதை நெய்யோடு கலந்து அக்னியில் போடுகிறாய்! அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்! – அவிர் பவம்.

அதை, நீ நெருப்பில் போட் டதை, சாப்பிட்ட பின்பு தான், நான் நெருப்பிலிருந்து வந்தவள். அதை சாப்பிட்டு விட்டுதான் வருவேன். ஆகாரம் ஏதாவது சாப்பிட்ட பிறகுதான், அம்பாள் வருவாள்.

அம்பாளுக்கு முதலில் பிரசாதம் கொடுக்கனும். அதனால் தான் இன்றைக்கு முதலில், விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ, அம்பாளை பூஜை பண்ணினால், யாருக் காவது ஒருவருக்கு வெற்றிலை பாக்கு கொடுத்துவிட்டுத்தான், எழுந்திருக்க வேண்டும். பிரசாதம்/சாப்பாடு கொடுத்து விட்டு எழுந்திருக்க வேண்டும்.

‘பகவத் பூஜை, பகவத் சேவை – பகவதி சேவை’ என்று கேரளத்தில் பெயர். பகவத் சேவை – பகவதி சேவைக்கு அற்புதமான சாப்பாடுகள் நிவேதனம் பண்ணிப் போடவேண்டும். ‘பகவத் சேவை’ பண்ணினால் அம்பாள் வந்துவிடுவாள். ஏன்? அம்பாள் நெல்லின்/தான்யத்தின் வடிவமாக இருக்கிறேன். அம்பாள் உன்னு டைய நாக்கின் வடிவமாக இருக்கிறேன் என்று சொல்ல, தான்ய வடிவில் இருக்கிறேன் என்று அக்னியில் போடச் சொன்னேன்.



தான்ய வடிவமாக இருக்கிறேன்; வலிமையின் வடிவமாக இருக்கிறேன் என்று சொல்லி, உன் உடம்பில் 100% வலிமையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், வலிமைக்கு ஆதிகாரணமாய் இருக்கின்ற நெய்யை உருக்கி, அக்னியில் விடு! என்று சொன்னேன்.

‘ஆவிர்பவம் ஆவாஹ
யாமி ஸ்வாஹா:’

## சீடனும் ஞானிகளும்

**சீடன்:** ஏன் சங்காபிஷேகத்திற்கு உணர்வு அதிகம்?

**ஞானி:** நம்மிடம் முழுமை இல்லை என்பதால் மனிதன் உண்டுபண்ணிய விஷயங்களில் நமக்கு பிரியம் ஏற்படுவதில்லை. அதனால் முழுமையான பொருளான சங்கினால் அபிஷேகம் செய்வது சாலச் சிறந்ததாக கருதப்படுகிறது.

**சீடன்:** மகான்கள் எப்படி வித்தியாசம் பாராமல் எல்லோருக்கும் உபதேசிக்கிறார்கள்?

**ஞானி:** உயிருக்கும் உயிருக்கும் வித்தியாசமில்லை. உடலுக்கும் உடலுக் குமே வித்தியாசம். அதனால் குருநாதர்கள் மிருகங்களுக்கு கூட உபதேசிக்கிறார்கள்.

**சீடன்:** இந்த தொண்டு ஏன் எல்லோராலும் செய்யமுடிவதில்லை?

**ஞானி:** பழவினை இருந்தால் தான் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணமே தோன்றும்.

**சீடன்:** ஞானிகளின் நியாயம் உலக சமுதாய, சமயப் பிரச்சினைகளில் எப்படி செயல்படுகிறது.

**ஞானி:** மகான்கள் மனித நியாயத்தை வைத்து இந்தப் பிரச்சினைகளுக் கெல்லாம் தீர்வு காண முயலுவதில்லை.

**சீடன்:** மகான்கள் கூறும் வழிமுறை தான் என்ன?

**ஞானி:** மனிதன் மனிதனிடத்தில் மனதைக் கொடுத்தால் கருணை இரண்டு பேரிடத்திலும் பிறக்கிறது. ஒரு மனிதனிடத்தில் மாத் திரம் பிறந்தால் அடுத்தவன் பிச்சைக்காரனாகிறான். பின் பிரச்சி னைகள் தீர ஏது வழி,

**சீடன்:** பக்தன் என்பவன் யார்?

**ஞானி:** எதில் ஈடுபட வேண்டும் என்பது தெரியாமல் ஈடுபடுபவர்கள் மனிதர்கள். எதில் ஈடுபட வேண்டும் என்று தெரிந்தவன் பக்தன்.

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

# "ஆ(ம)ஹா பாரதம்"

பாகம் 20



ஸ்ரீ கருடனின் நட்பைப் பெற விரும்பிய இந்திரனிடம் கருடன் "இந்திரா உன் விருப்பப் படியே நாம் நண்பராவோம். உன் ஏற்றுக்கொள்ள முடியாத என் பலத்தை நீ அறிந்து கொள். உயர்ந்தவர்கள் தங்கள் பலத்தையும் , குணத்தையும் தானாக புகழ்வதில்லை. நீ என் நண்பராகி விட்டதால் தெரிவிக்கிறேன்.

காடு, மலை, கடல்களுடன் உங்களையும் சேர்த்து இந்த உலகனைத்தையும் எனது ஒரே சிறகினால் எடுத்துக் கொண்டு பறக்க முடியும் என்றால் எனது பலத்தை நீயே அறிந்து கொள்" என்றார்.

"நீ சொல்வது மிக்க சரி. உன்னால் எல்லாம் முடியும். நீ என் நட்பை ஏற்றுக் கொள். மற்றும் உனது சொந்த உபயோகத்திற்காக இந்த அமுதத்தை எடுத்துச் செல்லவில்லையானால் அதை என்னிடமே கொடுத்துவிடு. நீ இதை யாருக்குக் கொடுக்க விரும்புகிறாயோ அவர் களால் நமக்குத் துன்பம் ஏற்படலாம்" என்றான்.

"தேவராஜனே! நீ கவலைக் கொள்ள வேண்டாம். இதை நான் ஒரு காரணமாக எடுத்துச் செல்கி றேன். ஆனால் அவர்களை குடிக்க விட மாட்டேன். மேலும் நான் இதை எந்த இடத்தில் வைக்கிறேனோ நீ அங்கிருந்து உடனே எடுத்துக் கொண்டு விட லாம்"



என்று சொன்னார் கருடன்.

"நீ சொன்ன இந்த விஷயத்தால் நான் மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பதால் என்னிடமிருந்து நீ ஏதேனும் வரத்தைப் பெற்றுக் கொள் ளலாம்" என்றான் இந்திரன்.

"நான் பலம் பொருந்தியவன் என்ற போதும் இதை உன் விருப்பப்படி வேறு எவரையும் அருந்த விட மாட்டேன். மற்றும் உனது விருப்பப் படியே நான் ஒரு வரத்தைக் கேட்கிறேன். பலம் பொருந்திய பாம்புகள் எனக்கு உணவாகும்படியான வரத்தைக் கொடுக் கவும்" என்று கேட்டார்.

கருடன் கேட்டபடியே இந்திரனும் வரமளித் தார். இவர்களின் நட்பை பார்த்துக் கொண்டு இருந்த ஸ்ரீஹரியானவர் கருடன் கூறிய விஷயத்தை ஆமோதித்தார். இந்திரன் மறு படியும் கருடனிடம் "நீ வைத்த மறுகணமே இதை அபகரித்து வந்து விடுவேன்" என்றார்.

கருடன் தன் தாயிடம் வந்து சேர்ந்ததும் சர்ப்பங்களிடம் "பாம்புகளே! இதோ நீங்கள் கேட்ட அமுதத்தைக் கொண்டு வந்து விட்டேன். இதோ இதை இந்த குசத்தின் (புல் ) மீது வைக்கிறேன். நீங்கள் நீராடி மங்கல கர்மங்கள் செய்து முடித்து வந்து இதைப் பருகுங்கள். இனி நீங்கள் கூறியபடி என் தாயை அடிமை விலங்கிலிருந்து விடுவியுங்கள் " என்றார்.

பாம்புகளும் அப்படியே ஆகட்டும் என ஒப்புக் கொண்டு நீராடச் சென்று விட்டன. அந்த சமயம் பார்த்து இந்திரன் வந்து அந்த கலசத்தை கவர்ந்து சொர்க்கலோகம் சென்று விட்டார். நீராடி மங்கல காரியங்கள் முடித்து, அமுதம் பருகும் ஆசையோடு வந்து பார்த்ததும் கலசத்தை காணவில்லை. விஷயம் அறிந்ததும் இது நம்முடைய கபடத்தன்மைக்கு கிடைத்தப் பரிசு என எண்ணிக் கொண்டு திருப்தி அடைந்து விட்டன. கலசத்தின் ஸ்பரிசம் குசத்தின் மீது பட்டதால் அதற்கு பவித்ரி என்று பெயர் வழங்கலாயிற்று.

கருடன் தேவலோகத்திலிருந்து அமுதத்தை கவர்ந்து வந்து நாகங்களுக்கு அளித்ததுடன் பாம்புகளை இரு நாக்குகள் கொண்டவையாகவும் ஆக்கி விட்டார். அன்று முதல் தன் தாயுடன் வனத்தில் விருப்பப்படிச் சஞ்சரித்துக் கொண்டும், பக்ஷிகளால் கௌரவிக்கப்பட்டு சர்ப்பங்களை உணவாகக் கொண்டு நாற்புறமும் தன் புகழைப் பரப்பி தாயை மகிழச் செய்தார்.

கதை போகும் போக்கில் நம்மால் கவனிக்க முடியாமல் பல விஷயங்கள் கதையோடு ஓடி விடும்.

அமுதம் என்பது ஒருவரை நீடித்து வாழ வைக்கும் ஒரு பானம். அதற்கு இவ்வளவு சண் டை, சச்சரவுகள் தேவையா? என்பதும், அதை தேவர்கள் மட்டும் தான் பருக வேண்டும். மற்றவர்கள் பருகக் கூடாது என்று சொல்வதும், அதற்கு பக வான் விஷ்ணுவும் உடன் இருக்கிறார் என்பதும் படிப்பவர் மனதில் ஏதேனும் ஒரு நெருடலை உருவாக்கி விடக் கூடும்.

நன்மை, தீமை என்பதில் நாம் அதிகம் பெற விரும்புவது நன்மையாக மட்டுமே இருக்கும். தீமையை யாரும் பெற விரும்புவதில்லை என்பதும், தீமையை செய்பவரையும் நாம் அதிகம் நேசிக்க விரும்புவதில்லை. தீமை நன்மையை அழிக்க எண்ணும் போது அதை வெல்ல வேண்டும் என்றால் அது சாதாரண வலிமை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதோடு அது அழியக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

ஆயுள் நீட்டிக்கும் அமுதத்தால் தீமை யானவர்கள் மரணமிலா வாழ்வை பெற்று விட் டால்....? இன்றைய காலகட்டத்தில் நாம் செய்தி தாள்களில் காணும் கொடுமைகள், வன்முறைகள் எல்லாம் நம்மை நிலை குலையச் செய்கின்றன. இவைகளுக்கு என்று தீர்வு வருமோ என்று நம்மில் பலர் வேண்டுவதைப் பார்த்து வருகிறோம். இந்த நேரத்தில் அந்த வன்முறையாளர்களுக்கு மேலும் பணமும், அதிகார பலமும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அரசு அறிவித்தால் நமக்கு எப்படி இருக்கும்? இதுப்போன்ற சூழ்நிலை எக்காலத்திலும் இருக்கத்தான் செய்கிறது. அன்றைய கால கட்டத்தில் அமுதம்தான் அரசு அறிவிப்பைப் போன்றது என்பதால் தீமையானவர்கள் அதைப் பெற முடியாதபடி எதிர்கட்சியினர் போராடி வந்தனர். பலம் மிகுந்தவனை நட்பாக்கிக்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கொண்டாவது நாம் இதை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டி விடுகிறார்கள்.

இந்த கருடனின் கதையை படிப்பவர்கள், சொற்பொழிவு வாயிலாக கேட்பவர்கள் புண்ணிய லோகமான சொர்க்கத்தை அடைகிறார்கள் என்று இந்த கதைக்கான பல சுருதி சொல்லப்படுகிறது.

கதையை சூதர் தான் சொல்லிக் கொண்டு வருகிறார் என்பதை இடையிடையே நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியே சௌனகர் ஆங்காங்கே ஒரு கேள்வியை கேட்டு வைக்கிறார்.

நமது சந்தேகத்தைதான் சௌனகர் கேட்டுக் கொண்டு வருகிறார் என்பதாகவே தெரிகிறது. இப்போது ஒரு கேள்வியை கேட்கிறார்.

சூதரே ! கத்ருவின் மூலம் நாகங்களின் சாபமும், புதல்வர் மூலம் வினதாவின் சாபமும், மற்றும் வினதாவின் புதல்வர்களின் பெயரும் கூறினீர். சர்ப்பங்களில் முக்கியமானவற்றின் பெயரையும் கூற வேண்டுகிறேன்.

சௌனகர் இப்படிக் கேட்டதும் சூதர் சில முக்கியமான நாகங்களின் பெயரை மட்டும் குறிப்பிடுகிறேன் என்று அவைகளின் பெயர்களை அறிவிக்கலானார்.

நாகங்களில் முதன் முதலாகத் தோன்றியவர் சேஷ நாகர். பின் வாசுகி, ஐராவதம், தக்ஷகன், கார்க்கோடகன், தனஞ் ஜயன், காளீயன் எனத் துவங்கி பலரின் பெயரை கூறி ........... இறுதியில் ஹோதரமென்பவை உண்டாயின. எண்ணிக்கை அதிகமுள்ளதால் முக்கியமானவை மட்டும் கூறப்பட்டன. அவைகளின் வாரிசுகளின் மிகவும் அதிகமாகும் என்று முடித்தார்.

சூதரே! நாகங்களின் பெயரை அறிந்தோம். கத்ருவின் சாபம் தெரிந்தும் அதிலிருந்து விடுபட அவைகள் என்ன செய்தன என்று கூறுங்கள் என்றார் சௌனகர்.

தாய் கத்ரு, வினதாவை அடிமைப்படுத்த முயலும் போது அதற்கு உடன்படாத நாகங்களை சபித்து விட்டாள் அல்லவா? அவர்களைப் பற்றி கேட்கிறார்.

நமக்கும் அதைத் தெரிந்து கொள்ள ஆவல் இருக்கும். நாமும் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்த இதழில்....

**- Thali**, Ph:09786223577


மற்றவர்களும் பயன்பெற
அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

whatsapp: 8825844033

aanmeegamalar@gmail.com






# உயர்ந்தவனாக சோதனைகளை கடந்தாக வேண்டும்

இளைஞர்களே! பெருஞ்செயல்களை செய்து முடிப்பதில் எப்போதும் முன்னேறிச் செல் லுங்கள். ஏழைகளிடமும், சமுதாயத்தில் ஒடுக்கப் பட்டவர்களிடமும் இரக்கம் காட்டுங்கள். நமக்கு மரணமே வாய்த்தாலும்கூட அவர்களுக்கு இரக்கம் காட்டுவது நமது லட்சியம் ஆகும்.

என்னுடைய லட்சியத்தை உண்மையில் சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத்தன்மையை எடுத்துச்சொல்வதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

எழுந்திருங்கள். விழித்திருங்கள். நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன்னால், மனிதப்பிறவியினால் பெறுவதற்கரிய பெரிய நன்மையை அடையுங்கள். லட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், லட்சியம் ஒன்றுமில்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாக சொல்வேன்.

மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்தாக வேண்டும்





# உடல் உறுப்பை காக்கும் இயற்கை உணவு முறைகள்

“நேரமின்மை” இன்றைக்கு ஒரு பெரும் பிரச்னை. இதனால் வாழ்க்கைத் தரம் குறைந்து வருகிறது. நோய்களே இல்லாமல் ஆரோக்கியமாக இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது வருத்தப்படவேண்டிய செய்தி. நேரத்தை குறைந்த அளவில் எடுக்கும், சில எளிய வீட்டு வைத்தியங்கள் நிறையவே உள்ளன. அவை நம் ஆரோக்கியத்தின் கவசமாகும். அவற்றைத் தெரிந்து கொண்டால், நோய் வரும் முன் நம்மைக் காத்துக்கொள்ளலாம். அதாவது, ரத்தம் சுத்தமில்லாமல் இருப்பது, அதைத் தொடர்ந்து உள்ளுறுப்புகள் பாதிப்பதே நோயாக வந்து நம்மைத் துன்புறுத்துகிறது. ஆகவே, நோய் வரும் வாய்ப்பையே தடுத்துவிட்டால் ஆரோக்கியம் எப்போதும் நம் வசமே. அன்றாடம் பயன்படுத்தும் இயற்கை விளைப்பொருட்களின் மூலம் நம் உடலின் உறுப்புகளைப் பலப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

### மூளை

❖ கறிவேப்பிலைத் துவையலை 48 நாள்கள் சாப்பிட்டு வந்தால் மூளையின் செயல்பாடு சீராகி, நாம் சுறுசுறுப்புடன் இருப்போம்.

❖ தாமரைப்பூவை நீர் விட்டு காய்ச்சி தினசரி மூன்று வேளையும் ஒரு டம்ளர் அளவுக்கு குடித்து வந்தால் மூளையின் செயல்பாடு மேம்படும். இதை 48 நாள்களுக்குக் குடித்து வரலாம்.

❖ குறைந்தது ஆண்டுக்கு இருமுறையாவது கைகளில் மருதாணி வைத்தால், மனம் தொடர்பான கோளாறுகள் நீங்கும். அதன் குளிர்ச்சி மூளைக்கு ஓய்வைத் தரும்.

❖ வல்லாரை இலைகளை நெய்யில் வதக்கி சுடுசாதத்துடன் இரண்டு கவளம் சாப்பிட்டு வர வேண்டும்.

❖ தினசரி இரண்டு துண்டு தேங்காயை மென்று தின்பதால் மூளையில் எந்தப் புண்களும் வராது.

❖ இலந்தைப் பழத்துடன் கருப்பட்டிச் சேர்த்து அரைத்துக் குடித்தால் பதற்றத்தைக் குறைக்க முடியும். மூளையின் நரம்புகள் வலுப்பெறும்.

❖ பெருவிரலும் ஆள்காட்டி விரலும் இணைத்து வைத்திருக்கும் சின் முத்திரையை, தினமும் 20 நிமிடங்கள் செய்தால் மூளையின் செல்கள் புத்துயிர் பெறும். நினைவுத்திறன் மேம்படும்.

### கண்கள்

❖ பாலுடன் குங்குமப்பூ சேர்த்துக் குடித்து வருவது நல்லது.

❖ தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வர பார்வைத்திறன் மேம்படும்.

❖ அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல் பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரைச் சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும்.

❖ வெண்டைக்காய் மோர்க்குழம்பு, வெண்டை மசாலா, வெண்டைக்காய் பொரியல் என சாப்பிட கண்களுக்கு நல்லது.

❖ தினந்தோறும் நெல்லிக்காய் ஜூஸ் குடித்து வந்தால், கண் தொடர்பான பிரச்னைகள் வராது.

❖ தினமும் 5 பாதாம்களை சாப்பிட்டு வரவேண்டும்.

### பற்கள்

❖ மாவிலைப் பொடியை பற்பொடியாகப் பயன்படுத்தி பல் தேய்த்து வந்தால் பற்கள் உறுதியாகும்.

❖ கோவைப்பழம் சாப்பிட்டால் பல் தொந்தரவுகள் வராது. உணவிலும் அடிக்கடி கோவைக்காயைச் சேர்த்துக்கொள்ளலாம்.

❖ செவ்வாழைப் பழத்தை தினமும் இரவில் சாப்பிட்டு வர பல்லில் ரத்தக்கசிவு, பல் சொத்தை ஆகியவை வராது.

❖ பல் உறுதியாக, உணவை நன்றாக மென்று சுவைக்க வேண்டும். கேரட், கரும்பு, ஆப்பிள் போன்றவற்றைப் பத்து முறையாவது நன்றாக மென்று சாப்பிட வேண்டும்.

### நரம்புகள்

❖ சேப்பங்கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் நரம்புகள் பலம் பெறும்.

❖ இரண்டு அத்திப்பழத்தை தினந்தோறும் சாப்பிட்டு வரலாம்.

❖ மாதுளைப் பழச்சாற்றில் தேன் கலந்து 48 நாள்கள் குடித்து வரலாம்.

❖ இலந்தைப் பழத்தை அவ்வப்போது சுவைத்து வரலாம்.

❖ கரிசலாங்கண்ணிக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

### ரத்தம்

❖ வாரம் இரண்டு நாள்கள் பீட்ரூட் ஜூஸ் குடிப்பதால் ரத்தம் உற்பத்தியாகும்.

❖ திராட்சைப் பழ ஜூஸ் ஒரு டம்ளர் அல்லது ஒரு ஸ்பூன் இஞ்சிச் சாற்றில் சிறிது தேன் கலந்து குடித்து வந்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்.

❖ தினம் ஒரு கப் அளவுக்கு தயிர் சாப்பிட்டு வந்தால், ரத்தக் குழாய் அடைப்புகள் நீங்கும்.

❖ அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வந்தால், ரத்தத்தில் உள்ள கிருமிகள் அழியும்.

❖ இரண்டு லிட்டர் நீரைக் கொதிக்க வைத்து, அதில் சீரகத்தைப் போட்டு 10 மணி நேரம் கழித்து, அந்தத் தண்ணீரை நாள் முழுவதும் குடித்து வந்தால் ரத்தம் சுத்தமாகும்.

❖ நாவல் பழம், இலந்தைப் பழம் ஆகியவற்றை சீசன் நேரத்தில் தவறாமல் சாப்பிட வேண்டும்.

### சருமம்

❖ தேகம் பளபளப்பாக மாற ஆவாரம் பூ டீ குடித்து வரலாம். ஆரஞ்சுப் பழத்தையும் சாப்பிட்டு வரலாம்.

❖ முட்டைக்கோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மறையும்.

❖ சந்தனக் கட்டையை இழைத்து அதனுடன் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசினால் பருக்கள் நீங்கும். முகம் பிரகாசமாகும்.

❖ ஆரோக்கியமான உடல், பொலிவான முகம், பளபளப்பான சருமம் பெற அறுகம்புல்லை நீர் விட்டு அரைத்து, வெல்லம் சேர்த்து வாரம் மூன்று முறைக் குடித்து வரவேண்டும்.

❖ எந்தவித தோல் நோய்களும் அண்டாமல் இருக்க, வெள்ளரிக்காய், மஞ்சள், வேப்பம்பூ



சேர்த்து அரைத்து, உடலில் பூசிக் குளித்து வந்தால் சருமம் மின்னும்.

### நுரையீரல் இதயம்

- ❖ தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினசரி சாப்பிட்டு வர நுரையீரல், இதயம் பலமாகும்.
- ❖ கரிசலாங்கண்ணிக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நல்லது.
- ❖ ஆர்கானிக் ரோஜாப்பூ, பனங்கற்கண்டு, தேன் ஆகியவற்றை லேகியம் போல கலந்து, தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வர இதயம் பலமாகும்.
- ❖ இஞ்சி முரப்பா, இஞ்சிச் சாறு, இஞ்சித் துவையல் ஆகியவற்றைச் சாப்பிட்டால் இதயம் ஆரோக்கியமாக துடித்துக் கொண்டிருக்கும்.
- ❖ முசுமுசுக்கை இலையை பொடியாக்கி மாதம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நுரையீரல் புற்றுநோய் வராது.
- ❖ சுண்டை வற்றலை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொண்டால் நுரையீரல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.
- ❖ திராட்சை ஜூஸ், உலர் திராட்சையை சாப்பிட இதயம் பலம் பெறும்.
- ❖ முள்ளங்கிச் சாற்றை அரை கப் அளவுக்கு மூன்று வாரங்களுக்கு குடித்து வருவது நல்லது. இதனால், நுரையீரல் தொடர்பான பிரச்னைகள் நெருங்காது.
- ❖ ஆளிவிதைகள், பாதாம், வால்நட் ஆகியவற்றில் ஒமேகா 3, நல்ல கொழுப்பு இருப்பதால் இதயத்துக்கு நல்லது.

### வயிறு

- ❖ காலையில் எழுந்ததும் ஊறவைத்த ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை சாப்பிட்டு சிறிதளவு தயிரையும் குடிக்க வேண்டும். வயிறு சுத்தமாகும்.
- ❖ மாதுளம்பூவை தேநீராக்கிக் குடித்து வந்தால், வயிறு தொடர்பான பிரச்னைகள் நீங்கும்.
- ❖ கொன்றை பூ கஷாயம், புதினா துவையல் ஆகியவை வயிற்று வலியை தீர்க்கும் சிறந்த மூலிகைகள்.
- ❖ வறுத்துப் பொடித்த சீரகத்தை ஒரு டம்ளர் மோரில் போட்டுக் குடிக்க வேண்டும்.
- ❖ வாரத்தில் இரண்டு நாள்கள் ஒரு டம்ளர் தேங்காய்ப்பாலுடன் கருப்பட்டி சேர்த்துக் குடித்து வருவதால், வயிறு தொடர்பான பிரச்னைகள் எதுவும் வராது.
- ❖ சுரைக்காயை வாரம் இருமுறை உணவில் சேர்த்துக்கொள்ள தொப்பை கரையும்.
- ❖ வாழைப்பூ, மணத்தக்காளிக் கீரையை வாரம் ஒருமுறையாவது சாப்பிட வயிற்றுத் தொந்தரவுகள் நீங்கும்.
- ❖ வாரம் ஒருமுறை கொள்ளு ரசம் சாப்பிடக் கெட்டக் கொழுப்பு கரையும். தொப்பையும் குறையும்.

### கணையம்

- ❖ பாகற்காய், அவரைப்பிஞ்சு, நாவல்பழம் ஆகியவற்றை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் கணையத்தின் செயல்பாடு சீராக இருக்கும்.
- ❖ தினசரி 5 ஆவாரம் பூவை மென்று தின்ன வேண்டும்.
- ❖ கொன்றைப் பூவை அரைத்து மோரில் கலந்து குடித்து வந்தால் கணையத்தின் செயல்பாடுகள் சீராகும்.
- ❖ கோவைப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

### கல்லீரல் மண்ணீரல்

- ❖ சீந்தில் கொடியை தேநீராக்கி குடித்து வருவது நல்லது.
- ❖ கரிசலாங்கண்ணிக் கீரையைக் கூட்டாக செய்துச் சாப்பிடலாம். கீழாநெல்லியை புளியங் கொட்டை அளவு வெறும் வயிற்றில் மாதந்தோறும் ஐந்து நாளைக்குச் சாப்பிட வேண்டும்.
- ❖ மாதத்தில் இரண்டு நாள்கள் வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுங்கள்.
- ❖ வில்வ பழச்சதையை நாட்டுச் சர்க்கரையுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.
- ❖ திராட்சை பழச்சாற்றை அருந்தி வந்தால் கல்லீரல், மண்ணீரல் உறுப்புகளுக்கு நன்மையைச் செய்யும்.

### மலக்குடல்

- ❖ அகத்திக்கீரையை வாரம் ஒருநாள் சமைத்துச் சாப்பிட வேண்டும். இதனால், மலக்குடல் சுத்தமாக இருக்கும்.
- ❖ பப்பாளிப் பழத்தை வாரம் மூன்றுமுறை சாப்பிடுவது நல்லது.
- ❖ அடிக்கடி முளைக்கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வரலாம்.
- ❖ நார்த்தங்காய் ஊறுகாயை அளவுடன் சாப்பிடுவது நல்லது. செரிமானச் சக்தி மேம்படும்.
- ❖ மாலை ஆறு மணி அளவில், மாம்பழ சீசனில் மாம்பழத்தைத் தொடர்ந்து சுவைத்து வரலாம்.
- ❖ மாதுளைப்பூ சாறு 15 மி.லி, சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து மூன்று வேளையும் குடித்து வரவேண்டும்.

### பாதம்

- ❖ கண்டங்கத்திரி இலையுடன் தேங்காய் எண்ணெயை ஊற்றிச் சாறு பிழிந்துத் தடவினால் கால் வெடிப்பு சரியாகும்.
- ❖ விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு எடுத்து பாதத்தில் தடவி வந்தால் பாதம் மிருதுவாக இருக்கும்.
- ❖ லேசாக சூடு செய்த வேப்பெண்ணெயை விரல்களின் இடுக்கில் தடவினால் சேற்றுப் புண்கள் சரியாகும்.
- ❖ வாழைப்பூவை பருப்பு சேர்த்துச் சமைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால்களில் வரும் எரிச்சல் நீங்கும்.
- ❖ இரண்டு கால் விரல்களையும் தினமும் ஐந்து நிமிடத்துக்கு நீட்டி மடக்கும் பயிற்சியைச் செய்து வரவேண்டும். ரத்த ஓட்டம் சீராகும். பாதம், விரல் வலி சரியாகும்.



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சர்ப வடிவில் சித்தர்கள் வாழ்வார்கள் சர்பங்களை காக்க பெரியோர் அறிவுறுத்தியதன் காரணம்

நாம் நாகத்தை பாம்பாக மட்டுமே பார்க்கிறோம். ஆனால் நமது பண்டைய கால ஞானிகள் பாம்பு வடிவத்தை மூலாதார சக்கரத்தில் உறங்கி கொண்டிருக்கும் குண்டலினி சக்தியாக பார்த்தார்கள்.

புற்றுக்குள் இருக்கும் பாம்பு சீண்டி விட்டால் சீறிக் கொண்டு எப்படி கிளம்புமோ அதே போலவே யோக பயிற்சியால் சீண்டப்படும் குண்டிலினி தண்டுவடத்தை பற்றிக் கொண்டு சரசரவென பிரம்ம கபாலத்தை நோக்கி எழும்பும் என்று சொன்னார்கள்.

இதனால் தான் கடவுள்களின் உருவத்தோடு நாகத்தை சம்பந்தப்படுத்தினார்கள்.

பரந்தாமனின் பாம்பு படுக்கை பரமசிவனின் பாம்புமணி எல்லாமே குண்டலினி தத்துவத்தை விளக்க எழுந்ததேயாகும்.

இனி நாக வழிபாடு நம் நாட்டில் எப்போது இருந்து கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை சற்று ஆராய்வோம்.

இந்திய துணைக்கண்டம் முழுவதுமே ஆதிகாலம் தொட்டே நாக வழிபாடு, இருந்து வருகிறது.

சைவம், வைஸ்ணவம், பௌத்தம், ஜைனம் போன்ற மதங்கள் வளர்ச்சி அடைந்த காலத்தில் அந்தந்த சமயத்தின் சாயல்களை கொண்டு இந்திய துணைக் கண்டம் முழுவதுமே நாக வழிபாடு விரிவடைந்தன என சொல்லலாம்.

திருமாலும் சிவபெருமானும் மட்டுமே நாகங் களை துணையாக கொள்ளவில்லை. பல புத்தர் சிலைகளை பார்க்கும் போதும் மகாவீரரின் சில தோற்ற கோலங்களை காணும் போதும் ஐந்து தலை நாகம் அவர்களுக்கு குடைபிடித்து இருப்பது தெரிகிறது.

சிந்து சமவெளி நாகரிக காலத்திலும் அதற்கு முன்னரும் கூட நாகங்களை மக்கள் வழிபட்டு இருக்க வேண்டும்.

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு முத்திரைகளில் வழிபாட்டுக்குரிய நாகங்கள் செதுக்கப்பட்டிருப்பதை வைத்து நாம் இந்த முடிவுக்கு வரலாம்.

வேதங்களில் பல இடங்களில் பாம்புகளை பற்றி விரிவான குறிப்புகள் வருகின்றன.

வேதகால மக்கள் பாம்புகளை அஹீ என்ற பெயரில் அழைத்திருக்கிறார்கள். ரிக், சாம வேதங்களில் வணக்கத்துக்றியதாக பாம்புகள் சொல்லப்படவில்லை.

ஆனால் யஜுர் வேதம் பாம்புகளை தெய்வ நிலையோடு ஒப்பிட்டு பேசுகிறது யஜூர் வேதம் பாஞ்சால நாடுகளில் தொகுக் கப்பட்டிருக்க வேண்டும்.

பழங்கால பாஞ்சல தேசத்திடில் தலைநகரம் அஹீ சத்திரமாகும். அதாவது இதன் பொருள் பாம்புகளின் வீடு என்று சொல்லலாம்.

இந்த தேசத்தின் மன்னர்களாக விளங்கிய அக்னிமித்திரன், பானு மித்திரன் ஆகியோர்களின் காலத்து நாணயங்களில் பாம்பு முத்திரை பொறிக்கபட்டுள்ளது.

அதர்வண வேதத்தின் சில பகுதிகளில் பாம்புகளை தாந்திரிக நெறிக்கு பயன்படுத்தும் விபரங்கள் உள்ளன

நாக வழிபாடு பற்றி நித்தேஷ என்னும் பௌத்த நூலும் பேசுகிறது. அதில் சர்ஜீகோணோவில் உள்ள பகவா நாகோ என்ற வழிபாட்டுக்குரிய நாகத்தை பற்றி விளக்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

குஷான மன்னர்களின் காலத்தில் இந்த நாக வடிவம் சிலை வடிவாக உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மதுராவில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் கனிஷ்க மன்னனால் செதுக்கி வைக்கப்பட்ட நாக வடிவம் இன்றும் இருக்கிறது.

கடவுளின் பிரதிநிதியாக கருதப்பட்ட நாகங்கள் காலப் போக்கில் இறந்தவர்களின் ஆவியோடு தொடர்பு படுத்தப் பட்டும் புதையல்களை மர்மமான முறையில் பாதுகாக்கப்படுகின்றன என்றும் நம்பிக்கை ஏற்பட்டது.








பாம்புகளை பொறுத்த வரை எல்லா மதத்தினரும் அறிவு பூர்வமாகவும், மூடத்தன மாகவும் நம்பினர் என்றே சொல்ல வேண்டும்.

பண்டைய கால சிற்பங்களும், ஓவியங்களும், நாகர்களும், நாக கன்னிகளும் காட்டப்படுகிறார்கள்.

இவர்கள் பாதி மனித உருவம், பாதி பாம்பு வடிவமும் பெற்றவர்கள்.

பாலித்தீவில் நாக கன்னிகை மழை கடவுளான வருண தேவனின் பனிப்பெண்ணாக கருதுகிறார்கள்.

மகாபாரதத்தில் அனுசாய பருவத்தில் நாகத்தை வழிபடுவதன் மூலம் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரத்தின் பலத்தை பெறலாம் என்று சொல்லப்படுகிறது.

இதனாலேயே பிற்காலத்தில் உருவான வராக சிற்பத்தில் காலுக்கடியில் பாம்பு செதுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் தனிப்பெரும் வாழ்க்கை முறையை விவரிக்கும் சங்க இலக்கியங்களில் நாக வழிபாடு சிறப்பாக கூறப்பட்டுள்ளதை காணலாம்.

பொதுவாக பாம்புகளை வழிபடுவது இந்து மதத்தில் உள்ள யோக சார மார்க்கத்தின் வழிபாட்டு முறையேயாகும்.

ஆனால் அந்த உண்மை நிலை மறைந்து இன்று கிராம தேவதைகளின் பட்டியலில் நாக தேவதைகள் சேர்ந்து விட்டன.

இதற்கு முக்கிய காரணம் இறந்தவர்களின் ஆன்மா பாம்பு வடிவத்தில் உலாவுவதாக உள்ள நம்பிக்கையே ஆகும்

நல்லப்பாம்பு என்ற நாகத்தை வீணாக சாகடிக்க கூடாது என்று சொல்வதில் பல அமானுஷ்ய உண்மைகள் உண்டு

சித்தர்கள் பரகாய பிரவேசம் என்ற கூடுவிட்டு கூடுபாயும் வித்தை தெரிந்தவர்கள் என நமக்குத் தெரியும்

மனித ஆத்மாவானது மனித சரீரத்தை தவிற காக்கை மற்றும் நாகப்பாம்பின் உடல்களில் சுலபமாக பிரவேசிக்கலாம் என்று சித்தர்களின் ரகஸிய சித்தாந்தங்கள் சொல்கின்றன.

இதனால் தவ வாழ்வை எந்தத் தொந்தரவும் இல்லாமல் கழிக்க பாம்பின் உடல்களை தேர்ந்தெடுத்து பல சித்தர்கள் வாழலாம்.

நாம் தெரியாத்தனமாக சர்ப்பங்களை சாகடித்தால் அவர்களின் தவத்தைக் கலைத்த பாவத்திற்கு ஆளாவோம்.

எனவேத்தான் பாம்புகளை சாகடிக்க வேண்டாமென முன்னோர்கள் சொன்னார்கள்

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

# எந்த விரல் மூலம் விபூதி பூசவேண்டும்

விபூதியை எந்த விரல்களில் பூச வேண்டும், எந்த விரல்களில் பூசக்கூடாது. அவ்வாறு விரல்களின் மூலம் பூசினால் என்ன பலன் என்பதையும் நமது முன்னோர்கள் அழகாக கூறியுள்ளனர்.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன் படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பி ட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

**கட்டை விரல்:** கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

**ஆள் காட்டி விரல்:** ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட் கள் நாசம்.

**நடுவிரல்:** நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தா ல் நிம்மதியின்மை.

**மோதிர விரல்:** மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

**சுண்டு விரல்:** சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் ஏற்படும்.

மோதிர விரல் கட்டை விரல்

மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொணடால் உலகமே வசப்படம். எடுக்கும் முயற்சி வெற்றி பெரும்.



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# குருக்ருபாயோகப்படியான ஸாதனையின் சித்தாந்தம்

குருக்ருபாயோகப்படியான ஸாதனையின் சித்தாந்தம் எவ்வளவு மனிதர்களோ, அவ்வளவு இயல்புகள், அவ்வளவு ஸாதனை வழிகள்

பூமியில் மக்கட்தொகை பல கோடிக்கும் அதிகம்; அதாவது ஈச்வரனை அடைய பல கோடிக்கும் அதிக வழிகள் உள்ளன. இந்த பல கோடிக்கும் அதிகமான வழிகளில் எந்த இரு வழிகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒவ்வொருவரின் உடல், மனம், விருப்புவெறுப்பு, குணகுறைகள், நம்பிக்கைலக்ஷியங்கள், ஆசைகள் வெறுப்புகள் ஆகியவை வேறு வேறானவை. ஒவ்வொருவரின் புத்தியும் மாறுபட்டவை. ஸஞ்சித் ப்ராரப்த கர்மாக்களும் வேறானவை. ஒவ்வொருவரின் ப்ருத்வி, ஆப, தேஜ, வாயு, ஆகாய தத்துவங்களும் (மனிதன் பஞ்சபூதங்களால் ஆனவன்), ஸத்வ, ரஜ, தம ஆகிய முக்குணங்களும் வேறானவை. பெரும் பான்மையினர் வேறு வேறான இயல்புகளை, தகுதிகளைக் கொண்டிருப்பதால் பகவானை அடையும் வழிகளும் வேறு வேறாக உள்ளன. ஒருவரின் இயல்பு மற்றும் தகுதிக்கேற்ற ஸாதனை செய்யும்போது பகவானை விரைவில் அடைய முடிகிறது.

### குருக்ருபாயோகப்படி ஸாதனையின் முக்கிய தத்துவங்கள்

பலருக்கு ஸாதனையின் உள்ள தத்துவங்கள் தெரியாததால் தவறான ஸாதனையை செய்து தங்கள் ஆயுளை வீணாக்குகின்றனர். இதைத் தடுக்க கீழே கொடுக்கப்பட்டுள்ள தத்துவங்களை நன்கு புரிந்து கொண்டு ஸாதனை செய்வது அவசியமாகிறது.

### விருப்பம் மற்றும் தகுதிக்கேற்ற ஸாதனை தத்துவ எண் 1

ஸனாதன் ஸன்ஸ்தாவின் ஒவ்வொரு ஸாதகரும் இந்த தத்துவப்படி ஸாதனை செய்கின்றனர். உதாரணத்திற்கு, சில ஸாதகர்கள் ஸன்ஸ்தாவின் மூலம் வெளியிடப்படும் நூல்களை எழுதும் பணியில் ஈடுபடுகின்றனர். சிலர் சமூகத்தினரிடையே சென்று ஸத்ஸங்கங்கள், சொற்பொழிவுகள், பாலஸன்ஸ்கார் வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகின்றனர். சிலர் ஸனாதனின் ஆச்ரமத்தில் சமையலறைப் பிரிவு, துப்புரவுப் பிரிவு ஆகியவற்றில் ஸேவை செய்கின்றனர். வழி வேறாக இருந்தாலும் பெரும் பான்மையினரின் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

### பலவற்றிலிருந்து ஒன்றிற்கு செல்வது தத்துவ எண் 2

ஈச்வரன் ஒன்றாக இருந்தாலும் இந்த உலகம் பலபல பலவாக பரந்து விரிந்துள்ளது. இந்த பலவற்றிலிருந்து ஈச்வரனான ஒன்றிற்கு நாம் செல்ல வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். இதை எப்படி சாதிப்பது என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

1. பூஜையறை: ஒவ்வொருவரின் பூஜை அறையிலும் 8 10 தெய்வப் படங்கள் இருக்கும். இவ்வளவு அதிக அளவு தெய்வப் படங்கள் வைக்கத் தேவையில்லை. தெய்வப் படங்களைக் குறைக்கவும். பூஜையறையில் குலதெய்வம், கணபதி, குலவழக்கப்படி பூஜிக்கப்படும் பால கிருஷ்ணன், மாருதி அல்லது அன்னபூரணி மற்றும் சிவன் அல்லது துர்கா ஆகிய உச்ச தெய்வங்களில் எந்த தெய்வத்தை உபாஸனை செய்கிறோமோ அதன் படத்தை வைக்கலாம். இவற்றைத் தவிர உள்ள மற்ற தெய்வப் படங்களை விஸர்ஜனம் செய்யவும். நாம் மனிதர்கள் அனைவரும் என்ன பேசுகிறோமோ அவை வார்த்தைகளைக் கொண்டது. நம்முடையது நாதமொழி. தேவர்களுடையது ஒளிமொழி. நம்முடைய நாதமொழியை தேவர்களின் ஒளிமொழியாகவும் தேவர்களின் ஒளிமொழியை நம்முடைய நாதமொழியாகவும் மாற்றும் காரியத்தை ஸ்ரீ கணபதி செய்கிறார். அதனால் கணபதியை பூஜையறையில் அவசியம் வைக்க வேண்டும்.



2. கோவிலுக்கு செல்வது : சிலர் திங்களன்று சிவன் கோவிலுக்கும், செவ்வாய் வெள்ளியன்று அம்மன் கோவிலுக்கும், வியாழனன்று தத்த கோவிலுக்கும், சனியன்று மாருதி கோவிலுக்கும் செல்வர். அவ்வாறு செய்வது ஆன்மீகத்திற்கு ஏற்றதல்ல. ஏனென்றால் ஆன்மீகத்தில் ஏதாவது ஒன்றில் மனதை பதிய வைக்க வேண்டும். அதாவது குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் கோவிலுக்கு செல்ல வேண்டும். அருகில் குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் கோவில் இல்லையென்றால் அருகிலுள்ள கோவில் தெய்வத்தை, நமது குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் ஸ்வரூபமாக மனதில் வரித்து அந்த பக்தியோடு ச்ரத்தையோடு அந்த ஒரு கோவிலுக்கு செல்ல வேண்டும். பக்தியிருக்கும் இடத்தில் பகவான் இருப்பான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

3. புராண பாராயணம் : குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் புராணத்தைப் படிக்க வேண்டும். அநேக புராணங்களை அல்ல, ஏதாவது ஒரு புராணத்தைப் படிக்க வேண்டும். அவ்வாறு படிக்கும்போது இதுவே என் குலதெய்வத்தின் ஒரு ரூபம் என்ற ச்ரத்தையுடன், பக்தியுடன் படிக்க வேண்டும். புராணங்களில் ஆயிரக்கணக்கான வார்த்தைகள் உள்ளன. சிலர், நான் ஞானேச்வரியை எவ்வளவு பாராயணம் செய்தேனோ அந்த அளவு தாஸபோதத்தையும் பாராயணம் செய்துள்ளேன். வெறும் பாராயணம் செய்வதால் என்ன பயன்? ஸந்த் நாமதேவர் என்ன கூறுகிறார் ஒரு வரியானாலும் அதை அனுபவிக்க வேண்டும். வெறும் பாராயணம் செய்வதைக் காட்டிலும் அந்த நூலில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதை நடைமுறைப்படுத்த முயல்வது அதிக மஹத்துவம் வாய்ந்தது. புராணங்களில் பல்லாயிரக்கணக்கான வார்த்தைகள் வருகின்றன. அவற்றைக் காட்டிலும் ஒரே ஒரு நாமத்தை கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டும்.

4. தீர்த்த யாத்திரை : தீர்த்த யாத்திரை செல்வதிலும் இதே கொள்கையைக் கடை பிடிக்க வேண்டும். யாருக்கு குலதெய்வம் உள்ளதோ அல்லது உபாஸனை தெய்வம் உள்ளதோ அங்கு செல்லவே தீர்த்த யாத்திரை மேற்கொள்ள வேண்டும்.

5. பஜனைகள் பாடுவது : கிராமத்திற்கு கிராமம் பல பஜனை மண்டலிகள் உள்ளன. பஜனைகளில் தெய்வத்தின் நாமஜபத்தை எடுத்துக் கொள், ஸத்ஸங்கத்திற்கு செல், ஸத்ஸேவை செய், ஈச்வரனை அடைய ஏதாவது தியாகம் செய், இறைவனை அடைய வேண்டும் என்ற தாபத்தை வளர்த்துக் கொள் எனக் கூறப்படுகிறது; ஆனால் அவற்றை செயல்படுத்தாமல் எல்லா மக்களும் என்ன செய்கிறார்கள், பெரிய பெரிய பஜனைகளைப் பாடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அதாவது சினிமா பாடல்களைப் பாடுவதைக் காட்டிலும் பஜனைப் பாடல்களைப் பாடுவது சிறந்ததுதான்! பல தெய்வங்களின் பஜனைகளைப் பாடுவதைக் காட்டிலும் உங்களின் குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் பஜனைகளைப் பாடவும்.

6. ஆரத்தி : கணேச சதுர்த்தியின்போது மக்கள் முட்டாள்களைப் போல் ஐந்துஐந்து அல்லது பத்துபத்து ஆரத்திகளைப் பாடுகின்றனர். அண்டை வீட்டார் அரைமணி நேரம் ஆரத்தி செய்கிறார்கள் என்றால் நாங்கள் ஒரு மணி நேரம் செய்வோம் என்பதில் பெருமை கொள்கின்றனர்! கணேச சதுர்த்தியின்போது கணேச தத்துவம் அதிக செயல்பாட்டில் உள்ளது. அதனால் கணபதியின் ஆரத்தியை மட்டும் செய்தால் அதிக பலன் கிடைக்கும். ஸுககர்தா துக:ஹர்தா என்ற ஆரத்தியை பெரும்பான்மையினர் பாடுகின்றனர். இந்த ஆரத்திப் பாட்டில் கணேசரின் நாமங்கள் மூன்று அல்லது நான்கு முறைதான் வருகின்றன. கணபதியின் சக்தி எங்கு உள்ளது, லம்போதரன் என்ற நாமத்தில்தான். ரத்னமணிமய முகுடத்தை தரித்தவர் என்பதெல்லாம் கணபதியைப் புகழ்வது மற்றும் அவரை வர்ணிப்பது ஆகும். அதில் கணேச தத்துவம் இல்லை. அதனால் ஆரத்தியை மூன்று நான்கு நிமிடங்களில் முடித்துக் கொண்டு அதற்கு பதிலாக ஸ்ரீ கணேசாய நம: என்ற நாமஜபத்தை அதிகம் செய்வதால் நிச்சயம் அதிக பலன் கிடைக்கும். அதாவது பல ஆரத்திகளிலிருந்து ஒரு ஆரத்திக்கும் ஒரு ஆரத்தியிலிருந்து ஒரு நாமஜபத்திற்கும் படிப்படியாக செல்ல வேண்டும். கணேச சதுர்த்தி போன்ற விசேஷ தினங்கள் அல்லாத ஏனைய தினங்களில் குலதெய்வம் அல்லது உபாஸனை தெய்வத்தின் ஆரத்தியைச் செய்யலாம்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு : 09380949626

www.aanmeegamalar.com

# சிவ வழிபாட்டு முறை



சிவனை எப்படி வணங்க வேண்டும் என்று சிவ ஆகம விதிகளில் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து ஒருசில முக்கிய விஷயங்கள்...

சிவாலயத்தில் பலி பீடத்தருகில் தான் நமஸ்கரிக்க வேண்டும். 3,4,7,9 என்ற எண்ணிக்கைகளில் ஏதாவது ஒன்றினை மேற்கொள்ளலாம். வடபுறம், கிழக்குப்புறம் கால் நீட்டக்கூடாது. ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். கிழக்கு நோக்கிய சன்னதியானால் பலிபீடத்திற்குத் தென்கிழக்கு மூலையில் சிரம் வைத்து நமஸ்கரிக்க வேண்டும்.

தெற்கு, மேற்கு நோக்கிய சன்னதிகளில் பலிபீடத்திற்கு தென்மேற்கு மூலையில் சிரம் வைத்து நமஸ்கரிக்க வேண்டும். வடக்கு நோக்கிய சன்னதியானால் பலிபீடத்திற்கு வடமேற்கு மூலையில் சிரம் வைத்து நமஸ்கரிக்க வேண்டும். சூரிய கிரகணத்தின் போதும், சங்கராந்தி காலத்திலும் மேற்கே கால் நீட்டி நமஸ்கரிக்கலாகாது.

அதே சமயம் திரியாங்க நமஸ்காரம் (இருகரங் களையும் சிரம் மேல் குவித்து) செய்ய வேண்டும். பிராகாரத்தில் பிரதக்ஷிணம் செய்யும்பொழுது மிகவும் நிதானமாகச் செய்யவேண்டும். உட் பிராகார பிரதக்ஷிணத்தைவிட வெளிப்பிரகார பிரத க்ஷிணமே சாலச் சிறந்தது. 3,5,7,7,15,21 என்ற எண்ணிக்கையில் ஒன்றினை மேற்கொண்டு செய்யலாம்.

பஞ்சாட்சர மந்திரமே மிகவும் சக்தி வாய்ந்தது.

சிவ மந்திரங்களை நீங்கள் பாராயணம் செய்யும் போது வாழ்வின் எல்லா இன்பங்களையும் பெறு வீர்கள். சிவ மந்திரங்களுள் “நம சிவாய'' என்னும் பஞ்சாட்சர மந்திரமே மிகவும் சக்தி வாய்ந்தது. பிறர் காது கேட்க மந்திரத்தை உரக்கக் கூறுவது கூடாது.

தனக்கு மட்டும் கேட்கும் அளவு உதட்டசைவில் கூறுவது மத்திமம். மானசீகமாக மந்திரத்தை மனத்திற்குள் சிந்தனை செய்து ஜபிப்பதே உத்தமம். மந்திரங்களைப் பொருள் அறியாமல் ஜபித்தாலும் பலன் உண்டு.

சிவம் என்ற சொல்லுக்கு “செம்மை'' (பூரணத் துவம்), “மங்களமானது'' என்று பொருள். எல்லாவற்றிற்கும் மேலாக, முழுமையாக, தான் மங்களகரமாகவும் தன்னைச் சார்ந்தவர்களை மங்களகரமாக்குபவரும் ஆன இனிய இறைவனைச் சிவபெருமான் என்று அழைக்கின்றோம்.சிவ தரிசனம் செய்யும் வேளைகளைக் கொண்டே பலன்கள் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இந்து சமயக் கருத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவை:

**காலையில் தரிசிக்க நோய்கள் நீங்கும்.**

**நண்பகலில் தரிசிக்க தனம் பெருகும்.**

**மாலையில் தரிசிக்க பாவம் அகலும்**

**அர்த்த சாமத்தில் தரிசிக்க வீடுபேறு கிடைக்கும்.**

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தும் சிவனின் தொழில் எனப்படுகிறது. சிவனின் ஐந்து முகங்கள் சத்யோ ஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம்.

இம்முகத்தின்மூலம் ஆகம ரகசியப் பொருளினைக் கேட்டு அறிந்தனர் அறுபத்தாறு முனிவர்கள்.

அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்றுவகையான சிவ வழிபாட்டு முறையில் உருவ வழிபாடும் சைவர்களால் கடை பிடிக்கப்படுகிறது.

உருவ வழிபாட்டில் சிவனை, லிங்கம், மகேசுவர மூர்த்தங்கள், சிவ உருவத்திருமேனிகள் ஆகிய சிவ வடிவங் களாக சைவர்களால் வணங்குகிறார்கள். இந்த வடிவங்களை சிவ ரூபங்கள் என்றும், சிவ சொருபங்கள் என்றும் குறிப்பிடலாம்.

மகேசுவ மூர்த்தங்கள் என்று இருபத்து ஐந்து வடிவங்களும், உருவத்திருமேனிகள் என்று அறுபத்து நான்கு வடிவங்களும் குறிப்பிடப் படுகின்றன. சிவபெருமானை உருவ வழிபாடு செய்வதைவிட லிங்க வழிபாடு செய்வதே சிறந்தது என வியாசர் மகாபாரதத்தில் கூறி இருக்கிறார்.

`லிங்கம்‘ என்னும் சொல்லுக்கு எல்லாம் தோன்றி மறையும் மூலம் எனவும் `மங்கலத்தைத் தரும் பரம்பொருள்’ எனவும், `அண்ட சராசரங்கள் யாவும் ஒடுங்குவதும் மீண்டும் உற்பத்தியாகி வெளிப்படும் தன்மை கொண்டது’ என்றும் சிவாகமங்கள் விளக்குகின்றன.ஆலயங்களில் ஸ்தாபித்த லிங்கம் அசலம், இல்லங்களில் வைத்துப் பூஜிக்கும் லிங்கம் சலம்.

ஈசன் கருணைப் பெருக்கால் தோன்றியது சுயம்புலிங்கம்.சிவ வடிவங்கள் மொத்தம் 64 ஆகும். அவை போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என மூன்று வகைக்குள் வகைப் படுத்தப்பட்டுள்ளது. போக வடிவம் என்பது உமாமகேஸ்வரர், சந்திரசேகரர், ரிஷபாரூடர் முதலானவற்றை குறிக்கும். யோக வடிவம் என்பது தட்சிணாமூர்த்தி சுகாசனர் முதலானவற்றை குறிக்கும். வேக வடிவம் என்பது கங்காளர், வீரபத்திரர் முதலானவற்றை குறிக்கும். இவை முறையே உயிர்களுக்கு போகத்தை அருளுவதற்கும், யோகத்தை அருள்வதற்கும், வினைகளை நீக்கி அருள்வதற்கும் ஏற்பட்டவை சிவலிங்கம்.

தேவர்கள் சிவலிங்க வழிபாடு செய்வதற்காகவே விசுவ கர்மாவிடம் பற்பல சாந்தித்யங்களோடு கூடிய சிவலிங்கங்களைப் பெற்றனர்.

அவை :

அசுவினி தேவர்கள் மண்ணாலான லிங்கம்
இந்திரன் பதுமராக லிங்கம்
எமதர்மன் கோமேதக லிங்கம்
சந்திரன் முத்து லிங்கம்
சரஸ்வதி சொர்ண லிங்கம்
வருணன் நீல லிங்கம்
வாயுதேவன் பித்தளை லிங்கம்
விஷ்ணு இந்திர லிங்கம்
நாகர்கள் பவள லிங்கம்
பிரம்மன் சொர்ண லிங்கம்
ருத்திரர்கள் திருவெண்ணீற்று லிங்கம்
குபேரன் சொர்ண லிங்கம்
மகாலட்சுமி நெய்யினாலான லிங்கம்

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.